# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12.

வாரப் பதிப்பு விலை சதம் 15



USHA உஷா
தையல் மெஷின்கள் சகாய விலைகள்
மடக்கும் மாதிரி (போல்டிங்)
மெஷின் ரூ 395
சாதாரண கால் (டிரிடல்) ரூ 370
கை ரூ 265
சோல் ஏஜண்டு:- G. H REIMOO
17, புதியசோனகத்தெரு கொழும்பு
டெலிபோன் 6060



புத்தகம் 6 நந்தன ஸ்ரீ புரட்டாசி 20மீ உ [5-10-52] ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் பிறை 20 இதழ் 18


# கனப் மந்திரியைக் காத்திருக்கும் சங்கடங்கள்

## ஜீ. ஜீ. யின் காரியாலயத்தில் "கிண்டலும் கிளறலும்"

### கைத்தொழில் கடல் தொழில் பிரிக்கப்படுமா?

["ஒற்றன்" எழுதுவது]

தற்சமயம் அமெரிக்காவில் உத்தியோக சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் கைத் தொழில் கடற்றொழில் மந்திரி திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் இலங்கை திரும்பியதும் அவருடைய நிலைமை சுமுகமாகவிராதென்று அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

திரு பொன்னம்பலம் இலங்கையில் இல்லாத சமயத்தில், கூடிய மந்திரி சபைக் கூட்டம் கைத் தொழில் மந்திரியின் அதிகாரத்தின் கீழ் உள்ள பல்வேறு இலாகாக்களில் நடைபெற்று வருவதாகச் சொல்லப்படும் நிர்வாக ஊழல்களையும், உதாசீனங்களையும்பற்றி டலத்த ஆசங்கைகளையும் ஆட்சேபங்களையும் கிளப்பியுள்ளதாம்.

திரு பொன்னம்பலம் நாடு திரும்பியதும் இவற்றிற்கெல்லாம் பதிலிறுத்தாக வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதற்கிடையில் காஸ்டிக் சோடா, டி டி ரி, குளோரின் ஆகிய தொழிற்சாலைகள் உட்பட எட்டு தொழில் திட்டங்களை அரசாங்கம் ரத்துச் செய்யும் நிலைமை ஏற்படலாம் என்றும இதற்கு அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் பணத் தட்டுப்பாடு; தற்போதைய கைத் தொழில் மந்திரியின் நிர்வாகத்தில் பொதுவாக ஏற்பட்டிருக்கும் அதிருப்தியுமே காரணங்கள் என்றும் தெரியவருகிறது

பிரதம மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியான திரு மொண்டேக் ஜயவிக்ரம தற்போது தற்காலிக கைத் தொழில் மந்திரியாகக் கடமையாற்றிவருகிறார். இவர் பதவியேற்ற காலத்திலிருந்து கைத் தொழில் மந்திரி காரியாலயங்களில் பல "கிண்டலும் கிளறலும்" நடைபெற்றுவருகிறதாம். கட்டிக்கிடந்த பழம் "பைல்"கள் பல அவிழ்த்துப் பரிசீலனை செய்யப்படுகின்றனவாம்.

கைத் தொழில் மந்திரிக்குப் பதில் மந்திரியாக கடமை பார்ப்பதற்கு திரு மொண்டேக் ஜயவிக்கிரம நியமிக்கப்பட்டபோது அந்த நியமனத்தை திருபொன்னம்பலம் அவ்வளவு விரும்பவில்லையென்பதும் ஆனால் கைத் தொழில் மந்திரியின் வேகத்திற்கு ஒரு சறுக்கு கட்டையாக அமைவதற்காகவே அந்த நியமனம் அப்போது யு என் பி மேலிடத்தாரால் கட்டாயப்படுத்தி செய்யப்பட்டது என்பதும் பகிரங்க இரகசியம்.

மந்திரி பொன்னம்பலம் இலங்கை திரும்பியதும் மந்திரி சபையில் சில பல மாற்றங்கள் ஏற்பட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லையென்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர் அவர்கள் கூற்றுப்படி, திரு மொண்டேக் ஜயவிக்ரம நிரந்தர கைத் தொழில் மந்திரியாகவும் திரு ஜீ. ஜீ.

(9-ம் பக்கம் பார்க்க)

### சுரங்க வாய்க்காலுக்கு தேக்கமர முட்டு

நோர்ட்டன் பிரிட்ஜ் (லக்ஸபான) சுரங்க வாய்க்காலுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக சென்ற வாரம் ஒரு செய்தி பிரசுரித்திருந்தோம். இதைப் பற்றி இப்பொழுது மேற்கொண்டும் தகவல் கிடைத்திருக்கிறது.

சுரங்க வாய்க்காலுக்கு உள்பக்கத்தில் முட்டுக் கொடுப்பதற்காக தாங்கிகள் செய்வதற்கு பர்மா தேக்க மரங்கள் வாங்குவதில் அரசாங்க மின்சார இலாகா சமீபத்தில் ரூ 16,000 செலவு செய்திருப்பதாக தெரிகிறது

லண்டனிலிருந்து வரும் இரு நிபுணர்களுக்கும் சுரங்க வாய்க்காலின் சிமந்து வேலைகளின் நிலைமையைப் பரிசீலனை செய்யக் கூடியதாக இருக்க வேண்டுமென்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகிறது

இம்மாதிரி வேலைக்கு பர்மா தேக்க மரபலாயக்கற்றதென்றும், "ஹொரா" மரந்தான் இதற்குச் சிறந்ததென்றும் நிபுணர்கள் கூறுகிறார்கள். எனவே தேக்கைக்குச் செலவிடும் பணம் இந்த இலாகாவின் மற்றொரு ஊதாரிச் செலவாக இருக்குமென்று கருதப்படுகிறது.

1943ல் 'டைம்ஸ்' பத்திரிகையில் இது விஷயமாக சில கட்டுரைகள் எழுதிய பிரபல இஞ்சினீயர் திரு விமலசுரேந்திரா இச்சுரங்கம் காட்டுத்தனமாக குடையப்பட்டிருப்பதால் இதனை இஞ்சினீயர்களின் வேலை என்று கூற முடியாதென்றும், சிறிது காலத்திற்குள் இது இடிந்துவிடுமென்றும் எழுதினர் ஆனால் மந்திரி சர் ஜோன் அதற்குப் பதில் அளிக்குமுகமாக 'இது பத்து லட்சம் வருடங்களுக்கு சாசுவதமாக இருக்கும்" என்று கூறினார் இப்பொழுது இச்சுரங்க வாய்க்காலைப்பற்றி அவர் என்ன நினைக்கிறாரோ?

### முஸ்லிம் பிள்ளைகளுக்கு தமிழுக்குப்பதில் சிங்களம

அப்பளை சாஹிராக கல்லூரியில் தமிழுக்குப் பதில் சிங்களத்தை இரண்டாவது பாஷையாக கட்டாயத்தின் பேரில் கற்றுக் கொடுக்கப்படுகிறது இக்கல்லூரியின் போதனை மொழி ஆங்கிலமாகும். கீழ் வகுப்புகளிலுள்ள முஸ்லிம் மாணவ மாணவிகளில் பெரும்பான்மையினர் இப்பொழுது சிங்களம் படிக்கிலறனர்.

நாட்டில் தேசீயப் பாஷைக் கிளர்ச்சி நடைபெறுவதை முன்னிட்டு சிங்களத்தை நன்கு கற்றுக் கொள்ளாவிடில், அரசாங்க உத்தியோகங்களைப் பெறுவது சாத்தியமில்லாமல் போகுமென்றும், எதிர்கால இலங்கையில் முஸ்லிம்களுக்கு இடமிருக்காதென்றும் பிரஸ்தாபக் கல்லூரி அதி[illegible]

### செயற்கை அரிசித் தயாரிப்பு

மைசூர்—

செயற்கை அரிசி, உற்பத்தி நிபுணர்களான டாக்டர் வி. சுப்ரமணியமும், விஞ்ஞான அதிகாரி தர்சனசிங் பாட்டியாவும், இந்திய சர்க்காரின் உணவு ஆராய்ச்சி உப-மந்திரி திரு மாளவியாவைக் கண்டு பேசினர். அரிசியின் உருவத்தில் செயற்கைத் தானியத்தைத் தயாரிப்பதற்கு வேண்டிய இயந்திரங்கள் இறக்குமதியானவுடன் வேலை தொடங்[illegible]

### மாறுபடும் புள்ளி விவரம்

"பல்வேறு இலாகாக்களின் தலைவர்களால் அவ்வப்போது வெளியிடப்படும் நிர்வாக அறிக்கைகளில் காணப்படும் புள்ளி விவரங்கள் அனைத்தும் முற்றும் தவறானவையாகக் காணப்படுகின்றன.

'இந்தப் புள்ளி விவரங்களுக்கும் ஜனசங்கியை புள்ளி விவர டிரக்டரால் தொகுக்கப் பட்டிருக்கும் புள்ளி விவரங்களுக்குமிடையே மலையத்தனை வேற்றுமை காணப்படுகிறது. இது மிக மோசமான நிலைமையாகும்" என்று நிதிமந்திரியின் நிரந்தரக் காரியதரிசியான திரு ஏ. ஜி. ரணசிங்க வெளியிட்டுள்ள ஒரு சுற்றறிக்கை கூறுகிறது

இச்சுற்றறிக்கை சர்வ இலாகாக்களின் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது

அப்படியானல் வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரங்களும் வெறும் ஜோடனைதானு என்று பொதுமக்கள் ஏங்குகிறார்கள்

### வாழ்க காந்திஜி நாமம்!



கடந்த வியாழக்கிழமை அஹிம்ஸா மூர்த்தி காந்தி மகாத்மாவின் 84வது ஜெனனதினம் அகிலமெங்கும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

### 'பட்டா' பணம் கொடுத்த பிறகே சாட்சியம்

ஒரு வழக்கில் சாட்சி சொல்ல வந்த ஒரு டாக்டர் குருணாக்கல் போலீஸ் கோர்ட சாட்சிக் கூண்டில் ஏறி நின்று, தனக்கு 'பட்டா' பணம் கொடுக்கும் வரை சாட்சியம் கூறமுடியாதென்று மறுத்துவிட்டார் கடைசியில் நீதிபதி தலையிட்டு டாக்டர் கேட்ட பீஸ்'ஸைவிட கொஞ்சம் குறைவாகப் பெற்றுக்கொள்ள அவரைச் சம்மதிக்கும்படி செய்தார் கூண்டில் வைத்து அவர் கையில் பணம் கொடுக்கப்பட்ட பிறகே அவர் சாட்சி கூறியதாகசமீபத்தில்ஒருசெய்தி வெளியாகியிருக்கிறது.


இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிழை திருத்தம்

21-9-52 திகதி சுதந்திரன் முன்பக்கத்தில் 'உஷா' விளம்பரத்தில் மடக்கும் மாதிரி (போல்டிங்) மெஷின் ரூ 365/- என்றிருப்பதை ரூ; 395/- ஆகவும் சாதாரண கால் மெஷின் ரூ 70/- என்றிருப்பதை ரூ 370/- ஆகவும் திருத்தி வாசித்துக் கொள்ளவும்.


## வரி விளம்பரம்

வரிஒன்றுக்கு 50 சதம், 6 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூபாய் 3-00.

### தேவை

வின்ஸ்லோ பாதிரியாரின் தமிழ் ஆங்கில அகராதி தேவை.
எஸ். ஆர். 196, தட்டாதெரு கொழும்பு.

டபிள் டிமை சைஸ் பத்திரிகை அடிக்கக்கூடிய செஸ் உடனடியாக தேவை விண்ணப்பிக்க.
மானேஜர், சுதந்திரன் 194, ஏ தட்டாதெரு, கொழும்பு-12.


## மனைவியின் குற்றத்திற்கு கணவனுக்குத் தண்டனை

அரசாங்கச் சிப்பந்திகளின் மனைவிமார் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அதற்கு அவர்களின் கணவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இவ்வாறு ஓர் சுற்றறிக்கை கல்லோயா திட்டத்தில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது

## கெடியாரத்திற்கு நோய்!

மினுவான்கொட ஆஸ்பத்திரியிலிருக்கும் கெடியாரம் நீண்டகாலமாக நோய் வாய்ப்பட்டிருப்பதால்மணி காட்டுவதில்லையாம் மேஜைமீது வைக்கும் 'டைம் பீஸ்' கெடியாரமும் தலைகீழாக வைத்தால்தான் வேலை செய்கிறதாம்

## குழந்தைத் தொழிலாளர்களைப் பற்றிய புதிய சட்டம்

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதைப்பற்றி ஒரு புதிய சட்டம் சமீபத்தில் இயற்றப்படும்

ஏற்கனவே அமுலிலுள்ள சட்டத்திற்கு பல முக்கிய திருத்தங்கள் சேர்க்கப்படும் இச்சட்டம் இப்பொழுது தயாரிக்கப்படுகிறது இந்த நகல் சட்டத்தை மந்திரி சபைக்குச் சமர்ப்பிக்க முன்பு தொழிற் சங்கங்களுக்கும் இது விஷயத்தில் அக்கறையுள்ள ஏனைய ஸ்தாபனங்களுக்கும் இச்சட்டத்தைப்பற்றி தத்தம் அபிப்பிராயங்களை எடுத்துக்கூற சந்தர்ப்பம் அளிக்கப்படும்

# கேட்டுப்பாருங்கள்

குயுக்தி

★ க சத்தியானந்த சிவம் யாழ்ப்பாணம்
கே: நாங்கள் ஒரு விழா நடத்தப்போகிறோம் அதற்கு யாரை அழைக்கலாம்?
ப: திருப்பு விழாவாயிருந்தால் திரு நல்லையாவை அழையுங்கள். மூடுவிழாவாயிருந்தால் திரு பொன்னம்பலத்தை அழையுங்கள். அரசாங்க தொழிற்சாலை பலவற்றை மூடுவிழா நடத்தி அவருக்கு நல்ல அனுபவம் இருக்கிறது.

ஃ

மகேந்திரன் தம்பிராசா கோட்டை
கே: கடவுள் உலகத்தைப் படைப்பதற்கு முதல்நாள் என்ன செய்திருப்பார்?
ப: உலகத்தை எப்படிப் படைக்கலாம் என்று ஒரு பிளான் வரைந்து சொர்க்கத்தில் உள்ள முனிஸிபல் மேயரிடம் சமர்ப்பித்திருப்பார்.

ஃ

க. சிவசப்பு பெரிய நிலாவணை
கே: உடன்பிறந்த சகோதரனின் அன்புக்கும் சினேகிதனின் அன்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
ப: சகோதரனின் அன்பு பிதுரார்ஜித சொத்துக்கள் ஏதும் இருந்தால் அதைப் பங்குபோடப் பார்க்கும். சினேகிதனின் அன்பு சிகரட்டையும் தேத்தண்ணீரையும் பங்குபோடப்பார்க்கும்.

ஃ

எம். எல். வி. இராசலக்குமி இங்குராக்கொட
கே: பதிவிரதா தர்மத்தைப் பாதுகாக்க பத்தா அவசியமா?
ப: பதி இல்லாமல் எப்படி பதி விரதையாவது?

ஃ

ஏ. எம். தாஸீம் குக்கஹவல
கே: ஈன்ற அன்னை பெரியவளா? கட்டிய மனைவி பெரியவளா?
ப: தட்டுத்தராசில் ஏற்றி எடைபோட்டுப் பார்த்தால் தெரிந்துவிடுகிறது

ஃ

ம. மரியதாஸ் சாவகச்சேரி
கே: கம்பர் இராமாயாணம் எழுதியதன் நோக்கமென்ன?
ப: இலக்கியச் சுவை, கவிதைச் சுவை உள்ளவர்கள் அதைப் படித்து இன்புறட்டும்; அப்படியல்லாதவர்கள் அதைப் போட்டு எரித்து புதுப்புதுப் பதிப்புத தோன்ற உதவி புரியட்டும் என்ற பரந்த நோக்கத்தோடு எழுதியிருக்கலாம்.

ஃ

சி. சிங்காரவேல் யாழ்ப்பாணம்
கே: மலரிலே மலர் பூத்து தேன் பிலிற மலர்கொண்டு ஒற்றும் மர்மத்தை உம்மால் விளக்க முடியுமா குயுக்தியாரே?
ப: முடியும் சிங்காரவேலரே, நெடுநாள் பிரிந்திருந்த காதலனைக் கண்ட காதலியின் தாமரை மலர் போன்ற முகத்திலேயுள்ள குவளை மலர்போன்ற கண்கள் அகலத் திறக்கின்றன. புளகாங்கிதத்தினுல் தேனையொத்த கண்ணீரைக குவளை மலர்க் கண்கள் பிலிற்றுகின்றன. அப்போது காந்தள் மலர் போன்ற அவள் கரம் அந்தத் தேனை ஒற்றியெடுக்கின்றது. மர்மம் புரிந்ததா?

ச. சி. முகம்மது நிஸாம் பசறை
கே: உலகில் குற்றம் புரியாதவன் யார்?
ப: அவன்தான் நிரபராதி

ஃ

'ஸ்ரீபன்' தாமரைக்கேணி
கே: குதிச் சப்பாததும் வட்டக் கொண்டையும் கட்டி கோயிலுக்குக்கூட ஹான்ட் பாக் சகிதம் போகும் ஒரு யுவதி இங்கு நடைபெற்ற பாரதி விழாவில் பெண்கள் மேல்நாட்டு நாகரீகத்தை விட்டொழிக்க வேண்டும் என்று சொற்பொழிவாற்றினுரே இதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?
ப: "ஊருக் குடதேசம் ஒருக்கல்லடி" என்ற பழமொழிக்கு இன்னொரு உதாரணம

ஃ

க கந்தசாமி திரிகோணமலை
கே: பைத்தியப் பிடித்தவருக்குப் பண்பாய் மருந்தருளும் வைததியர்போன்ற திருக குயுக்தியாரே - என்றும், செயற் பெயரால்செம்மை தலைதூக்கும் உங்கள் இயற் பெயரைத் தந்திடுவீரோ?
ப: ஊரைச் சொன்னுலும் சொல்லலாம். ஒரு நாளும் பேரை வெளிச் சொல்லல் ஆகாதே.

## பரிசு ரூ. 3-00

யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனுல் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும். தகுந்த கேளவிகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமு மான பதில் கிடைக்கக்கூடிய சிறந்தகேள்வியைஅனுப்புபவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

ஃ

எஸ் கந்தசாமி, பளை
கே: பெண்கள் ஏன் சிரிக்கக்கூடாது?
ப: நன்ருகச் சிரிக்கலாம். "புகையிலை விரிச்சால் போச்சு பெண்பிளை சிரிச்சால் போச்சு" என்ற பழமொழி அர்த்தமற்றது.

ஃ

செ. வல்லிபுரம் நல்லூர் வடக்கு
கே: ஒரு தொழிலாளியின் பெண் ஒரு முதலாளியை விரும்புகிருள். ஒரு முதலாளியின் பெண் தொழிலாளியை விரும்புகிருள். இது ஏன்?
ப: கலப்பு மணத்தின் உயர்வை அவர்கள் உணர்ந்திருக்கலாம்!

ஃ

எஸ் வேலுப்பிள்ளை காவத்தை
கே: இந்தக் காலத்து ஆண்கள் அழகான பெண்களைப் பார்த்துவிட்டால் அங்கேயே அறிவிழந்து நின்றுவிடுகிருர்களே இது சரியா?
ப: இந்தக் காலத்து ஆண்கள் மட்டும் என்ன ஐயா, அந்தக் காலத்து ஆண்களும் அப்படித்தான் நின்ருர்கள். வள்ளியைக் கண்ட கந்தனும் அல்லியைக்கண்ட அர்ஜுனனும் என்ன செய்தார்கள்?

ஃ

வி கே நடேசன் நமுனகுல
கே: சொன்ன சொல் தவருதான் மனிதனுகும் என்று சொல்லப்படுகிறது. சொன்ன சொல்லைக் காற்றில் பறக்கவிடும் பெரிய மனிதர்களையும் சின்ன மனிதர்களையும் கொண்ட கூட்டத்தை எப்படியழைப்பது?
ப: தமிழ் காங்கிரஸ் என்று அழைக்கலாம்

ஃ

ஏ. எம் இஸ்மாயில், சம்மாந்துறை.
கே: நம் நாட்டு ஜனநாயக அரசியலை ஏன் சாக்கடை என்று சிலர் கூறுகின்ருர்கள்?
ப: மந்திரிமார்களுடைய கந்தர கோலங்கள் அதில் வழிந்து ஓடுவதால்.

ஃ

பொ தம்பிராசா, கழுதாவளை.
கே: மாமா குயுக்தியாரே, நான் உம்முடைய மகளைக் காதலிக்கவிரும்புகிறேன். உமது சம்மதமென்ன?
ப: தாராளமாகக் காதலியுப் மருமகனே. ஆனுல் பாவம், அவள் தான் உம்மைக் காதலிக்கமாட்டாள். ஏனெனில் அவள் இனி மேல்தான் பிறக்கப்போகிருள்
கே: சுதந்திரன் பத்திரிகையில் வரும் விஷயங்கள் யாவும் உண்மைதானு?
ப: கடந்த மாதம் 28-ந் தேதி சுதந்திரன் இதழின் முன் பக்க செய்தியையும் ஆசிரியத்தலையங்கத்தையும் படித்துப் பார்க்கவும்.
கே: உம்மைக் கடவுள் ஒருபோதும் கைவிட்டதில்லையா?
ப: நான் என்ன கடவுளின் கையைப்பிடித்துக் கொண்டு கரணம் அடிக்கிறேனு?

ப. சிவானந்தம், கொழும்பு.
கே: நமது நாகரீகம் உயர்ந்திருக்கிறதா?
ப: இரண்டு இரண்டரை அடி உயர்ந்திருக்கிறது என்று ராஜாஜீ கூறுகிருர். அதாவது நிலத்தில் சயனித்த நாம் கட்டிலில் சயனிக்கிறோம். தரையில் உட்கார்ந்து சாப்பிட்ட நாம் நாற்காலியில் உட்கார்ந்து மேஜைமீது வைத்து சாப்பிடுகிறோம். இது உயர்வில்லையா?

ஃ

புரட்சி நேசன், கல்முனை.
கே: என்னைப்போன்ற இளைஞர்கள் இளம் பெண்களின் முன்னேற்றத்திற்கு என்ன செய்யலாம்?
ப: அவர்களை ரிக்ஷாவில் ஏற்றி பாடசாலைக்கு இழுத்துக்கொண்டுபோய்ச் சேர்க்கலாம்.

ஃ

ஏ. யூ. எச் எம். வாழைச்சேனை.
கே: பெண்கள் வெற்றிக்கு கையாளும் ஆயுதங்கள் எவை?
ப: வெட்டும் கண்கள் அது தவறினுல் சொட்டும் கண்கள்.

ஃ

கே டி. கருப்பையா, பசறை
கே: ஒரு குடும்பப் பெண் எப்பொழுது ஆதவனைக் கண்ட செந்தாமரையைப் போல் மலர்கிருள்?
ப: கணவன் மாதம் முடிய சம்பளத்தில் ஒரு சதத்தையும் தொடாமல் அப்படியே முழுவதையும் கொண்டுவந்து அவள் கையில் பொடியும்போது.

ஃ

மறவன், ஏருவூர்
கே: பேய் என்பது ஒன்று உலகத்தில் உண்டா?
ப: ஒன்றல்ல பல பேய்கள் உள்ளன: பணப் பேய், சாதிப் பேய், சமயப் பேய், குடிப்பேய் என்று பலப்பல.
கே: மனிதன் தன் வாழ்வை செவ்வையாக நடத்த தேவைப்படுவது எது?
ப: சாமர்த்தியம்

★ இவ்வாராம் ரூ 3-00 பரிசு பெற்றவர்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரேநாளில் அறிந்துகொள்ளலாம்
நிர். 174 ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாக கழித்து, அசதி, சோம்பல், மேல்கால் கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, பிரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை பெரியது ரூ 5-75 சிறியது விலை ரூ 3-00 இத்துடன "ஆனந்தா கீழ்காய்நெல்லித்தைலத்தை" தேய்த்து வந்தால அதிக உஷ்ணம், கண எரிச்சல், மூலச்சூடு பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும கணணுக்குப் பிரகாசத்தையும் கொடுககும். சகல வியாதிகளுககும் விபரமடங்கிய கேட்லாக் இனமாக அனுப்புவோம்.

பெரிது ரூ 5-75 சிறியது ரூ3-00 வி.பி.பி. செலவுவேறு

புரோப்ரைட்டர்:- M. பொன்னையா
ஆனந்தா வைத்தியசாலை
நிர். 174 C, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கூற்றுவன் ஆணா, பெண்ணா?

## இயமன்களில் பலவகை உண்டு

### மரணதேவனை யொத்த காதலியின் கண்கள்

(இலக்கியப் பித்தன்)

உலகில் பிறப்பு எங்ஙனம் இயற்கையாகவே நிகழ்ந்து வருகிறதோ அங்ஙனமே இறப்பும் நிகழ்ந்து வருகின்றது. பிறப்பும் இறப்பும் ஒன்றையொன்று சமநிலைப்படுத்திக் கொள்ளும் இரு தராசுத் தட்டுகள் எனலாம். இறப்பு இறந்துவிட்டால் அம்மம்மா மேலும் மேலும் உண்டாகிக் கொண்டே இருக்கும் பிறப்புகளைத் தாங்க முடியாதே தரணியால்! இறப்பை உருவகப்படுத்திடும் இனிய சொல்தான் 'இயமன்' என்பது. இறப்பு என்ற சக்தியை ஆட்டிவைக்கிறவன் ஒருவன் உளனென்றும் அவன் பெயர் இயமன் என்றும் பண்ணிய கற்பனையே இயமன் என்னும் பெயர் வந்த காரணமாயிற்று நந் தமிழ் நாட்டில் சாவினை உண்டாக்குபவனாகிய இயமனுக்குத்தான் எத்தனை பெயர்கள்! கூற்று, கூற்றுவன், மறலி, காலன், தென்னவன், தென்புலத்தவன், இயமதர்மன் போன்ற பல பெயர்கள்! உயிரை உடலினின்று பிரித்து இங்ஙனம் உயிரையும் உடலையும் கூறுபடுத்துபவனாதலின் 'கூற்றுவன்' (கூறு × அவன்) என்றும் தென் திசையிலிருந்தே வருபவன் என்ற மூட நம்பிக்கை காரணமாகத் தென்னவன் தென்புலத்தவன் என்றும் உயிர் பறித்தலிலும் நீதி தவறாதவன் (!) என்ற நம்பிக்கை பற்றி 'இமயதர்மன்' என்றும் முறையே வழங்கப் பட்டான் இயமன் என்க!

கூற்றுவனுக்கு உண்டாகும் சினம் அடக்க முடியாததாக இருக்குமாம்! அச் சினம் குணமென்னுங் குன்றேறி நின்றால் வெகுளி போன்று காத்தலரிதாக இருக்குமோ என்னவோ! Beware the fury of a noble man! என்று ஒரு ஆங்கில மகானும் கூறுகிறான். ஆகவே மிகுந்த சினங் கொள்வோனைக் கூற்றுவனுக்கு உவமைப்படுத்தியுள்ளன சில தமிழ் நூல்கள்:

கூற்று வெகுண்டுவரினும்
மாற்று மாற்றலையே
(பதிற்றுப்பத்து 14
காலனனைய கடுஞ்சின முன்ப
(பதிற்றுப்பத்து 39,
'காலன் கிளர்ந்தாலுப
போல்வர்'
(புறப்பொருள் வெண்பா
மாலை கரந்தை 2)
'மாற்றருஞ் சீற்றத்தின்
கூற்றவனே'
(கணு நூல் -15)
'தென்புலத்தவன் போற்
செய்த
சீற்றமும், (திருக்கழுக்
குன்ற நாராயண 12)
கூற்று வெகுண் டென்ன,
(புறநானூறு 42)
கூற்றொத்தீயே மாற்றருஞ்
சீற்றம் (புறநானூறு 56
கூற்றுடன்று மேல்வரினும்,
(திருக்குறள் 765)

கூற்றுவனின் இயல்பான குணங்கள் உயிர்களுக்கு முடிவைத் தருதல், அவ்வாறு செய்தலிலும் செய்வதன் மூலமும் துன்பந் தருதல் போன்றனவாம். காலமறியாமல் உயிரைப் பறித்துச் செல்வான் காலன். சமயமும் அறியமாட்டான்; இன்பத்தை அனுபவிக்க இடங்கொடான். எனவே அச்சுறுத்தித் துன்பந் தருபவனாகவே கூற்றுவன் கருதப்படுவான் இளமைக்கும் முதுமைக்கும் வித்தியாசம் பாரான்; எல்லோரையுங் கொண்டு செல்வான் எனவே நமது கொடிய வெறுப்புக்கு ஆளாகின்றான் இயமன். அவனது கொடுஞ் செயல்கள் எங்ஙனம் கூறப் படுகின்றன பாருங்கள்:—

"வாள் அஞ்சான்
வன்கண்மை அஞ்சான்
வனப்பஞ்சான்
ஆள் அஞ்சான்
ஆயபொருளஞ்சான்—
நாளெஞ்சாக்
காலன் வரவெழுதல்
காணின்வீ டெய்திய
பாலினால் எய்தப்படும்"
"அழப்போகான்
அஞ்சான்
அலறினாற்கேளான்
எழப்போகான்
ஈடற்றாரென்று
தொழப் போகான்
என்னே இக் காலன்
ஈடேறார்
தவமுயல்வார்?
கொன்னே இருத்தல்
குறை!"
(ஏலாதி 23, 38)

விதிக்கப்பட்ட மரணம் வந்துற்றகாலை வாள்கொண்டு கூற்றுவனை விரட்டினாலும் சீமான் என்ற எண்ணங்கொண்டு அவனைச் சினந்தாலும், கெஞ்சிக் கேட்டாலும் நம்மைவிட்டு எங்ஙனம் அவன் அகல்வான்?

நமக்கு மிகுந்த துன்பந் தருபவைகளையோ தருகின்றவர்களையோ இயமன்களாக உருவகப் படுத்திக் கூறுவது வழக்கமல்லவா? அவ்விதக் கருத்துக்கள் கொண்ட பகுதிகள் இதோ:

"கல்லா ஒருவர்க்குத்
தம் வாயிற்
சொற் கூற்றம்;
மெல்லிய வாழைக்குத்
தான் ஈன்ற
காய் கூற்றம்;
அல்லவை செய்வார்க்
கறங் கூற்றம்; கூற்றமே;
இல்லிற் இசைந்தொழுகாப்
பெண் (நல்வழி)
'எதிரென்றெதிர் நிற்பாள்
கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதாள்
அரும்பிணி; அட்டதனை
உண்டி உதவாதாள்
இல்வாழ் பேய்; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும்
படை (நாலடியார்)

'சிலந்திப் பூச்சிக்கு அதன் முட்டைகளே எமன்; மிருகங்களுக்கு அவற்றின் கொம்புகள்; கவரிக்கு அதன் மயிர்; நண்டுக்கு அதன் குஞ்சுகள்; ஒருவனுக்கு அவன் வசை மொழிகள்' என சிறுபஞ்சமூலம் கூறும். தேளுக்கும் அதன் குஞ்சுகளே கூற்று. ஏனென்றால் தாய்த் தேளின் உடல் வெடித்து அதிலிருந்துதான் குஞ்சுகள் வெளிவரமுடியும்

தலைமகன் ஒருவனுக்குத் தலைவி பார்க்கும் பார்வையே தன்னைக் கொல்லும் இயமன் போலத் தென்படுகிறதாம்:

'பண்டறியேன் கூற்றென்
பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க்
கட்டு (குறள் 1083)
'கூற்றமோ கண்ணோ
பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று
முடைத்து' (குறள் 1085)

துறவிகளென்று கூறிக் கொண்டு துறவாதிருக்கின்ற போலிகள் உப்புக்கும் காடி நீருக்கும் எமன்கள்தாம்;

'துப்புர வில்லார்
துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங்
கூற்று (குறள் 1050)

வலியற்றவன் வலியுள்ளோனைத் துன்புறுத்த நினைத்தலை இயமனைக் கைகாட்டி அழைத்தலுக்கு ஒப்பிடுவார் வள்ளுவர்:

'கூற்றத்தைக் கையால்
விளித்தற்றால் ஆற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல்'
(குறள் 894)

தமது இராமாயணத்தில் கம்பநாடர் கூற்றுவனைப் பல விதமாக உபயோகப்படுத்தியுள்ளார். முக்கியமாக அரக்கர்களது இயிதொழிலைக் கூறுமிடத்துக் கூற்றுவனாக அவைகளை உருவகப் படுத்துகிறார். அங்கதன் தூதாகச் சென்று அரக்கர் கோமான் இராவணனைப் பார்க்கும்போது இராவணன் தீ, விடம், எமன் ஆகியவைகளாகிய உருவமாகத் தென்படுகின்றானும்!

'கடுங்கனல் விடமுங்
கூற்றும் கலந்து...' (அங்கதன் தூதுப்படலம் 19)

கலிங்கத்துப் பரணியில் போர்கள் வருணனையின் போது கூற்றுவனு மச்சப்படும்படியாகப் பலவகைச் சேனைகள் மாண்டன என்று கூறுகிறார் சயங்கொண்டார்.

'தென்றிசை நமனு தென
தெனு வென்றனன்'
(கலிங்கத்துப் பரணி)

புறநானூற்றில் அரசன் சினந்து போருக்கெழுதல் கூற்றுவன் உடன்றெழுதல் போலக் காணப்படுகிறதெனக் கூறப்படுகிறது.

"கூற்று வெகுண்டன்ன
முன்பொடு
மாற்றிரு வேந்தர்
மண்ணோக்கினையோ" (42)

நீதி வெண்பாவில் ஒவ்வொரு யுகத்திலும் வாழ்ந்த நர இயமன்கள் யாவரென்பது கூறப்பட்டிருக்கிறது. கிரேதயுகத்தில் இரேணுகாதேவியென்ற பெண் இயமனாக விளங்கினாளாம்! திரேதாயுகத்தில் இராமாயணத்தை ஏற்படுத்திய சீதை இயமனாக விளங்கினாளாம்; துவாபர யுகத்தில் பாரதத்திற்குக் காரணமான துரௌபதி இயமனாக இருந்தாளாம்! ஆனால் இக் கலியுகத்திலோ ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பெண் இயமன் இருக்கின்றார்களாம்! (நீதி

[6-ம் பக்கம் பார்க்க]

## பஞ்சம் வருகுது!

(எஸ். ஏ. அருணன்)

பஞ்சமும் வந்தது நெஞ்சமும் நொந்தது
பட்டினிச் சாவும் மலிந்ததுவே
தஞ்சமென்றே பலர் கெஞ்சினர் கஞ்சிக்கு
தனவந்த ருள்ளம் இரக்கவில்லை
பஞ்சை மக்களிரும் பாட்டாளி வீரரும்
பலியாயினர் பசிப் பேயினுக்கே
வஞ்சகச் செல்வர்கள் லஞ்சம் கொடுத்துண்டு
வாழ்ந்தனர் வங்கமா நாட்டினிலே

சீனாவிலே உண்ணும் தானிய மில்லாது
தின்னமுயன்றனர் மண்ணும் புல்லும்
ஆனாலும் பஞ்ச அரக்கன் விடவில்லை
ஆவி பறித் தரசாண்டு விட்டான்
நாலு திசையிலும் சோகக்குரல் வந்து
நம்மை திடுக்கிடச் செய்ததடா
சீனாவும் வங்கமும் பட்ட துயரெல்லாம்
செய்திகளாய் காதில் கொட்டினவே

அந்த நிலையெல்லாம் இந்த நாடெங்கணும்
அண்மையில் ஆரம்ப மாகுமென்று
மந்திரியும் ராஜ தந்திரியும் தேச
மக்கட் தலைவரும் கூறிவிட்டார்
முந்தி விரோதமும் சொந்தக் குரோதமும்
முற்றும் அகற்றி முனைந் தெழுந்து
இந்தத் தருணமே வந்திடுவீர், பசி
இல்லாது போக்கிட எல்லாருமாய்

அன்னிய நாட்டிலிருந் துணவு பல
ஆயிரங் கப்பலில் வந்திடினும்
உன்னுயிர் காக்க உதவிடாது, அது
உல்லாச செல்வருக்கே யுதவும்
எண்ணிடு முன்னந்த நாட்டினிலே வெகு
ஏழை மக்க ளுயிர் விட்டதனை
இன்றே துணிந்திடு நன்றே முயன்றிடு
இன்னல் களைந்திடத் தீவிர மாய்

செல்வருணவுகள் சேமித்து வைத்திடத்
திட்டமிட்டு விட்டா ரிப்பொழுதே
கள்ளமாலாம் கொள்ளை லாபமடிக்க நெற்
களஞ்சியங் கட்டிப் பதுக்கிவிட்டார்
இல்லாத ஏழைகள் இல்லந்தோறும் பயிர்
இன்றே செ[illegible]
வெள்ளம் வ[illegible]
விரைந்திடு பாட்டாளி சோதரனே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கொம்பனிக் கடிதம்

டக்ளஸ்துரை ஒருநாள் தமது பங்களாவில் சுந்தரம் வசித்து வந்த அறைக்குள் ஏதோ காரியார்த்தமாகச் சென்றபொழுது அங்கு நீண்டகாலமாக இருந்த ஒரு பழைய மேசையின் "டிராயரை" இழுத்தார். அதற்குள் ஒரு கறுப்புத்துணி மடித்து வைக்கப் பட்டிருந்தது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்த துரையின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அன்று 'டன்லப்' பாலத்தடியில் அவர் கப்புவாவிடம் அகப்பட்டுக் கொண்டு அவஸ்தைப்பட்டபொழுது எங்கிருந்தோ திடீரென்று தோன்றி அவருக்கு அபயமளித்த அந்த முகமூடி மனிதனின் முகத்தை அலங்கரித்த அதே முகமூடியை தமது பங்களாவில் கண்டால் அவருக்கு ஆச்சரியமுண்டாகாமலிருக்குமா?

சுந்தரத்தின் விலாசத்துக்கு வந்த கடிதத்தைத் தாம் பிரித்துப் பார்த்துப் பிறகு 'டன்லப்' பாலத்தடியில் ரஞ்சிதத்தைக் காணும் ஆசையால் கப்புவாவையில் சிக்கித் திண்டாடியதும் சுந்தரத்துக்குத் தெரியாதென்று எண்ணியிருந்த டக்ளஸின் மனம் கறுப்பு முகமூடியைக் கண்டதும் பதட்டமடைந்தது. டக்ளஸ் ரஞ்சிதத்தைக் காணும் எண்ணத்துடன் கம்பளைக்குப்போன அன்று பகல் சுந்தரத்தை பங்களாவில் கண்டார். பிறகு அங்கிருந்து திரும்பி வந்துகொண்டிருக்கையில் தோட்டத்துக்கு சிறிது தூரத்தில் கார் 'பஞ்சராகி' விடவே காரை அதிலேயே விட்டுப் போட்டு கால்நடையாக பங்களாவுக்கு வந்தார். அவர் பங்களாவை அடைந்தபொழுது சுந்தரம் அவனுடைய அறையில் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்ததை விளக்கு வெளிச்சத்தில் அவர் தன் கண்ணாலேயே கண்டார். அப்படியிருக்க சுந்தரம்தான் கார் கீர் ஒன்றுமில்லாமல் அவ்வளவு தூரத்துக்குச் சென்று தன்னைக் காப்பாற்றிவிட்டு தனக்கு முன்னால் பங்களாவுக்கு வந்து சேர்ந்துவிட்டான் என்று நம்புவது அவருக்கு முடியாதகாரியமாக இருந்தது. ஆனால் அவருடைய கையிலிருந்த முகமூடியோ "சுந்தரம் தான் அந்த முகமூடி ஆசாமி" என்று பறைசாற்றிக் கொண்டிருந்தது.

தான் நினைத்திருந்தது போல் சுந்தரம் ஒரு அப்பாவி ஆசாமி அல்லவென்று துரை எண்ணினார். தன்னைத் திருடர்கள் வழிமறித்து மரத்தோடு கட்டி வைத்துவிட்டுத் தனது பணத்தைக் கொள்ளையடிக்க முயன்றபொழுது சுந்தரம் அங்குதோன்றி திருடர்களை விரட்டியடித்ததை அவர் பிரமாதமான காரியமாக எண்ணவில்லை. திருடர்களைக் கண்டு பயந்து ஒளிந்திருந்த பயல் கப்புவா வெளியாகிருந்தபொழுது அவனுடைய கையிலிருந்த ரிவால்வரை பயப்படாது தைரியமாக கைப்பற்றி அதைக் காட்டி திருடர்களை மிரட்டி விரட்டினான். அதில் துணிச்சலோ வீரமோ துளிகூட இல்லை என்று அவர் எண்ணியிருந்தார்.

ஆனால் இரண்டாவது சம்பவம் சுந்தரத்தின் துணிச்சலையும் வீரத்தையும் மாத்திரமன்றி அவனுடைய புத்தி கூர்மையையும் துரைக்கு விளம்பரப் படுத்தின. சுந்தரம் தனது காரியங்கள் ஒவ்வொன்றையும் வேவுபார்த்து வந்திருக்காவிட்டால் தான் ரஞ்சிதத்தைக் காணும் எண்ணத்துடன் கம்பளைக்கு காரில் சென்றது அவனுக்கு எப்படித் தெரிந்திருக்கும் என்றெண்ணினார் துரை. தான் துரோகமாக அவனுக்கு வந்த கடிதத்தை உடைத்து வாசித்ததைத் தெரிந்து கொண்டு மாறுவேடத்துடன் தன்



னைப் பின்பற்றி 'டன்லப்' பாலத்துக்கு வந்து அந்த சாகஸச் செயல்களைச் செய்துவிட்டு தனக்கு முன் பங்களாவுக்கு வந்துசேர்ந்த அவன் அசாதாரணமான வீர இளைஞன்தான் என்று முடிவு கட்டினார் துரை.

இத்தகைய புத்திகூர்மையும் வீரமும் துணிச்சலுமுள்ளவன் தனக்கு நண்பனாக இராமல் விரோதியாக இருப்பதுதான் அவருக்குப் பிடிக்கவில்லை. இரண்டு தடவை தன்னைப் பேராபத்திலிருந்து காப்பாற்றினானென்ற நன்றியில்லாமல் தனது செய்கைகளையும் நடவடிக்கைகளையும் வேவுபார்க்கிறான் என்பதற்காக சுந்தரத்தை நஞ்சென வெறுத்தான் டக்ளஸ். சுந்தரத்தை இப்படியே விட்டுக் கொண்டிருந்தால், தான் கிளார்க் சமரவீராவைக் கைக்குள் போட்டுக் கொண்டு கள்ளக் கணக்குகள் எழுதுவதையும் எஸ்டேட் பணத்தைக் கொள்ளையடிப்பதையும் தொழிலாளிகளின் சம்பளத்தைச் சூறையாடுவதையும் கண்டுபிடித்து தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுவான் என்று பயந்தான் டக்ளஸ். சுந்தரத்தைத் தோட்டத்திலிருந்து வெளியேற்றுவதற்கு என்ன வழி

யென்று அவன் சிந்திக்கலானான்.

சுந்தரம்தான் அன்று முகமூடியணிந்து கொண்டு வந்து தன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டுமென்று டக்ளஸ் யூகித்தது சரிதான். டக்ளஸ் கம்பளைக்குப் போவான் என்பதைத் தெரிந்துகொண்ட சுந்தரம் மூன்று மணிக்கெல்லாம் கராஜிலிருந்த டக்ளஸின் காருக்குள் ஏறி பின் ஆசனத்திலிருப்பவர்கள் கால் போடும் இடைவெளிக்குள் பதுங்கியிருந்து கொண்டான். பனி கடுமையாக இருக்கும் இரவுகளில் கார் எஞ்ஜினை மூடி வைப்பதற்கு உபயோகிக்கும் மெழுகு சீலையால் அவன் தன்னைப்போர்த்திக்கொண்டதால் டக்ளஸ் கண்ணில் படவில்லை. "டன்லப்" பாலத்தடியில் கப்புவா கொடுத்த அறையினால் கதிகலங்கிப்போயிருந்த துரைக்கு முகமூடி மனிதன் எங்கிருந்து தோன்றினான் என்பதே தெரியாது.

கப்புவாவையும் அவனுடைய சகாக்களையும் அடித்து நொறுக்கிவிட்டு சுந்தரம் டக்ளஸ் துரைவரும் பாதையிலுள்ள ஒரு புதருக்குள் மாயமாகச் சென்று மறைந்து கொண்டான். காரை "ஸ்டார்ட்" செய்து கொஞ்சத் தூரத்துக்கு மெதுவாக ஓட்டிச் சென்று அதன் பிறகே 'கியர்' மாற்றி 'அக்ஸிலேட்டரை' அமுக்கி வேகத்தை அதிகரிக்க வேண்டும். 'கியர்' மாற்றுவதற்குள் கார் நியாயமாக எவ்வளவு தூரம் போகுமென்பதை நிதானித்து அவ்வளவு தூரத்துக்குள் இருந்த ஒரு புதர் மறைவிலேயே சுந்தரம் பதுங்கியிருந்தான். கார் புதரை சமீபித்ததும் சுந்தரம் ஓசைப்படாமல் காரின் பின்புறத்திலிருந்த 'லகேஜ் காரியரில்' பாய்ந்து உட்கார்ந்து கொண்டான். கார் தோட்டத்தை சமீபித்ததும் தனது கால்சட்டைப் பையில்வைத்திருந்த ரிவால்வரை எடுத்து 'டயரை' நோக்கிச் சுட்டான். டயர் வெடித்து சக்கரம் பஞ்சரானதும் துரை காரை நிறுத்தினார். சுந்தரம் தான் இருந்த இடத்திலிருந்துகுதித்து இருட்டில் மறைந்து குறுக்குப் பாதைவழியாக பங்களாவை அடைந்து முகமூடியைக் கழற்றி எறிந்துவிட்டு பெனியனையும் மாற்றிக்கொண்டு ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிப்பதுபோல் பாசாங்கு செய்தான். அவனுடைய இந்த சாகஸச் செயல்களனைத்தும் டக்ளஸுக்கு விபரமாகத் தெரியாவிட்டாலும் அந்த முகமூடி மனிதன் சுந்தரம்தான் என்பதை மட்டும் யூகித்துக்கொள்ள முடிந்தது.

* * *

நடுக்கடலில் அலைகளுக்கிடையே அகப்பட்டு கரைசேர வகையறியாது தத்தளிப்பவனுடைய கையில் ஒரு மரக்கட்டை தட்டுப்பட்டதுபோல் சுந்தரத்தை ஒழித்துக்கட்டுவ



கண்டிப்பாகக் கருப்பண்ணன் டக்ளஸ் துரையிடம் அன்று வழியனுப்பு விருந்துக் கொண்டாட்டத்திற்கு அவர்தான் தலைமைதாங்கி நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தற்கு வழியென்னவென்று இரவுபகலாக பலநாள் சிந்தித்துக்கொண்டிருந்த டக்ளஸ் துரைக்கு கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்த கடிதமொன்று ஆறுதலளித்தது. அதைக்கொண்டு சுந்தரத்தை வெளியேற்ற சூழ்ச்சி செய்தான் டக்ளஸ்.

"சமீப வருங்காலத்தில் தேயிலைக்கு நல்ல கிராக்கி ஏற்படுமென்று கம்பெனியார் எதிர்பார்க்கிறபடியால் மல்லிகைத் தோட்டத்தின் கிழக்கு எல்லையில் பற்றைக்காடாக இருக்கும் நூறு ஏக்கர் பூமியையும் வெட்டித் திருத்திப் பண்படுத்திப் பயிரிட வேண்டுமென்று டைரெக்டர்கள் கூடி முடிவு செய்திருக்கின்றனர். ஆகவே தாமதமின்றியில் தோட்டத்துப் பெரிய கங்காணியையாவது அல்லது செல்வாக்குள்ள வேறு உத்தியோகத்தர் ஒருவரையாவது இந்தியாவுக்கு அனுப்பி நூறு தொழிலாளர்களைக் கூட்டிவந்து பிரஸ்தாப வேலையை உடனே ஆரம்பிக்க வேண்டும்" என்று அக்கடிதத்தில் கண்டிருந்தது. அதை வாசித்ததும் துரை சந்தோஷம் தாங்கமாட்டாது துள்ளிக்குதித்தான்.

மலைக்குப்போவதற்கு ஆயத்தமாக இருந்த சுந்தரத்தை அழைத்து சமாச்சாரத்தை சொன்னான் டக்ளஸ். "கருப்பண்ணனை இப்பொழுது இந்தியாவுக்கு அனுப்ப முடியாது. இங்கு ஏகப்பட்ட வேலை இருக்கிறது. இந்த மாதத்துக்குள் மேல்மலையிலுள்ள ஐம்பது ஏக்கரும் கப்பாத்து செய்யப்பட வேண்டும். பாக்டரிக்கு மேற்கேயிருக்கிற நூறு ஏக்கரிலும் புல்மண்டிக் கிடக்கிறது. அந்தப் புல் முழுவதும் வெட்ட வேண்டும். தெப்பக்குளம் பக்கமாயிருக்கிற தேயிலைத் தூர் பூராவுக்கும் உரம் போட வேண்டும். பணிய புதிதாக நட்ட செடிகளுக்கு சுருட்டை நோய் ஏற்பட்டிருப்பதாக நேத்துகண்டாக்கு சொன்னார். அதுக்கு மருந்து தெளிக்க வேண்டும். கங்காணி இல்லாட்டா இந்த கூலியாட்களைக் கட்டி மேய்க்க ஏலாது. நீங்க இந்தியாவுக்குப் போய் கூலியாட்களைக் கூட்டிக் கொண்டு வர வேண்டும்" என்று துரை மூச்சுவிடாமல் பேசி முடித்தார்.

தொழிலாளிகளை அழைத்து வரும்படி கூறி சுந்தரத்தை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தால் கொஞ்சகாலத்துக்காவது சுந்தரத்தின் தொல்லையில்லாமலிருக்கும். அதற்குப் பிறகு சுந்தரத்தை அறவே இல்லாமல் செய்வதற்கு ஏதும் சூழ்ச்சி செய்யலாம் என்றெண்ணி ஆறுதலடைந்தான் டக்ளஸ்.

* * *

சின்னத்துரை சுந்தரம் தொழிலாளிகளை அழைத்து வர இந்தியாவுக்கு அனுப்பப்படவிருக்கிறார் என்ற செய்தி காட்டுத்தீபோல் மல்லிகைத் தோட்டமெங்கும் பரவிற்று. "வந்து முழுசாக ஆறு மாதம்கூட ஆகல்லை. அதற்குள் போகப் போறாரே!" என்று கவலைப்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சிதம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டார்கள் பெண் தொழிலாளிகள் "எங்கே போயிடப்போருர்! இந்தியாவுக்குப்போய் இரண்டு மூன்று மாதங்களில் தொழிலாளிகளை அழைச்சுண்டு வந்துதானே ஆக வேண்டும்" என்று ஆறுதல் கூறினர்கள் ஆண் தொழிலாளிகள்.

அந்த நூறு ஏக்கர் நிலத்தையும் பணபடுத்திப்பயிரிடும் வேலை சின்னத்துரை பொறுப்பில் தான் நடக்கும் என்பதைக் கேள்வியுற்ற தொழிலாளிகள் "அவருக்குக் கீழே வேலை செய்ய நாமெல்லாம் கொடுத்து வைக்கவில்லையே!' என்று அங்கலாய்த்தார்கள்.

சுந்தரம் இந்தியாவுக்குப் பிரயாணமாகவிருக்கிருர் என்பதைக் கேள்வியுற்ற மல்லிகைத் தோட்ட இளைஞர்கள் சுந்தரம் தங்களுக்குச் செய்த அளப்பரிய சேவைகளுக்கு நன்றி தெரிவிப்பதற்கு அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தீர்மானித்தார்கள். தோட்டத் தொழிலாளிகளிடமிருந்து பணம் சேர்த்து மிகவும் ஆடம்பரமான முறையில் சுந்தரத்துக்கு வழியனுப்பும் விருந்து நடத்துவதென்றும் விருந்துக்குப் பின்னர் சங்கீதம், நடனம், நாடகம் அடங்கிய கதம்ப நிகழ்ச்சியொன்றை நடத்துவதென்றும் திட்டமிட்டார்கள்

இந்த ஏற்பாடு கருப்பண்ணன் கங்காணிக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. நன்கொடை ஜாபிதாவில் அவருடைய பெயர் முதன்மை ஸ்தானம் பெற்றது. தனது மருமகனுக வரப்போகும் சுந்தரத்துக்கு மரியாதை செய்யக் கசக்குமா அவருக்கு? அவர் தாராளமாக நூறு ரூபாயைத் தூக்கிக் கொடுத்தார். பெற்றோர்கள்தான் பணம் பணம் என்று சாகிருர்களே! பிள்ளையாண்டானை காக்காய் பிடித்தாலாவது கொஞ்சம் சுவுசோவு காட்டி மீனுட்சியை ஏற்றுக்கொள்ள மாட்டானு என்றநப்பாசை அவருக்கு.

வழியனுப்பும் விருந்துக்கு நூறு ரூபாய் நன்கொடை கொடுத்ததோடு நின்றுவிடவில்லை கருப்பண்ணன். தனக்கு தோட்டத்திலுள்ள செல்வாக்கை மாரிமுத்து தம்பதிகள் ஸ்பஷ்டமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் தோட்ட உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரையும் நன்கொடை ஜாபிதா சகிதம் கண்டு ஐந்து, பத்தென்று போடுவித்தார். அப்புறம் தொழிலாளிகளிடமும் சென்று பல்லைக்காட்டிக் கெஞ்சிக் கூத்தாடி கிட்டமுட்ட ஆயிரம் ரூபாய் வரை வசூலித்துவிட்டார்

கடைசியாக அவர் டக்ளஸிடம் சென்று வழியனுப்பும் விருந்தும் கொண்டாட்டமும் நடைபெறவிருப்பதைப் பிரஸ்தாபித்து துரைதான் அக்கொண்டாட்டத்தை தலைமைதாங்கி நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். விருந்தும் கொண்டாட்டமும் டக்ளஸுக்கு பிடித்தமான விஷயங்கள் தான். ஆனல் சுந்தரத்தின் பேரால் அவை நடைபெறுவதுதான் அவருக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் சுந்தரத்துக்கு இவ்வளவு மரியாதை செய்வது தனக்குப் பிடிக்கவில்லையென்பதைக் காட்டிக்கொள்ள விரும்பாதவராக கருப்பண்ணன் கங்காணியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். "விருந்தும் கொண்டாட்டமும் முடிய இரவு பத்துப் பன்னிரண்டு மணியாகிவிடும். கண்டியில் இருக்கும் "மாகிரெட்"டை விருந்துக்கு அழைத்தால் அவளை இரவு பங்களாவில் தங்கச் செய்யலாம். அவள் வந்தால்தான் விருந்தும் சோபிக்கும். இந்தத் தோட்டக்காட்டுச் சனங்களுக்கு என்ன தெரியுப? அவள் வந்தால் அவள் கூட கொஞ்சநேரம் டான்ஸ் கூடப்பண்ணலாம்' என்று எண்ணிய துரையின் நாவில் ஜலமூறிற்று. விருந்தன்று தனது காரை அனுப்பி "மாகிரெட்"டை வரவழைக்க வேண்டுமென்று முடிவுகட்டினன் டகளஸ்.

இப்படி நின்றது நிற்க தான் இந்தியாவுக்கு பிரயாணப்பட கேருமென்று சுந்தரம் கனவுகூடக் காணவில்லை ரஞ்சிதத்தை அழைத்து வந்து தேயிலைத் தோட்டங்களையும் இந்திய தோட்டத் தொழிலாளிகளின் வாழ்க்கையையும் காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த சுந்தரத்துக்கு இந்த திடீர்ப் பிரயாணம் மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. வழியனுப்புகொண்டாட்டத்தை சாக்காக வைத்து ரஞ்சிதத்துக்கு அழைப்பனுப்பி அவளைத் தோட்டத்துக்கு வரவழைத்து இரண்டொரு நாள் அங்கேயிருந்து போகும்படி செய்ய வேண்டுமென்று தீர்மானித்து ரஞ்சிதத்துக்கு உடனே அழைப்பும் அனுப்பினன்

## நேரு கழகத்தில் பாரதி விழா

வடக்கன்குளம் நேரு இளைஞர் சங்கப் பொதுக் கூட்டம் 28-9-52 ல் சங்க கட்டிடத்தில் திரு சு. தாசன் தலைமையில் நடைபெற்றது திருவாளர்கள்: தொ. சேவியர், அ சதக்ஷிணுமூர்த்தி, "சங்கொலி' முதலியோர் புரட்சிக் கவி பாரதியார புரட்சி வீரன். செண்பகராமன் என்னும் விஷயம்பற்றி விரிவாகப் பேசினர்கள். பின் வருகிற நவம்பர் மாதம் நேரு ஜெயந்தியை வெகு விமரிசையாய் கொண்டாடுவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

---

## பிரிட்டிஷ் கம்பெனிகள் மீது பாகிஸ்தான் வழக்கு

கராச்சி—

ரெஜிஸ்டர் அத்தாட்சி பத்திரமின்றி தொழில் நடத்தியதாக 34 ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டிஷ் இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் மீது பாகிஸ்தான் அரசாங்கம் வழக்குத் தொடர்ந்திருக்கிறது

நுவரெலியா ஜில்லாவைச் சேர்ந்த டெனியாயப் பகுதியிலுள்ள சீதா தோட்டத்தில் வேலை செய்துவந்த மனுவேல், ஐயம்மாள் ஆகிய இரு தொழிலாளர்களும் நோட்டீஸ் தவணைப்படி தோட்டம் விட்டு வெளியேறவில்லை என்றும், தோட்டத் துரைக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் தோட்டத்தில் தங்கினர்கள் என்றும் அத்துமீறிப் பிரவேசித்ததாக குற்றஞ் சாட்டி தொடரப்பட்ட வழக்கு கடந்த 26-9-52 மாத்தறை நீதி மன்றத்தில் பிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை தாக்கல் செய்த தோட்டத்துரை கோர்ட்டில் ஆஜராகத் தவறியபடியால் வழக்கைத் தள்ளுபடிசெய்து எதிரிகள் குற்றவாளிகளல்ல என நீதிபதி எச். கே. எஸ். கைய்டஸ் தீர்ப்பளித்தார்.

இவ் வழக்கில் மனுவேல் என்ற தொழிலாளி தனது மனைவிக்குச் சேர வேண்டிய மாத சம்பளம் குறைகிறதென தோட்டத்துரையிடம் கேட்டாராம் அதன் காரணமாக தோட்டத்துரையை அவமரியாதை செய்துவிட்டதாக கூறி உடனே வேலை நீக்கஞ் செய்யப்பட்டார்

இது விஷயத்தை காலியிருக்கும் உதவி தொழிற் கமிஷனருக்கு தோட்டத்துரை முதலில் அறிவித்தாரென்றும், அவர் 12-9-52 ல் தோட்டத்துரையின் வேண்டுகோளின்பேரில் மேற்படி தோட்டத்துக்குச் சென்று ஒரு விசாரணை நடத்தினரென்றுப் தெரியவருகிறது. இவ் விசாரணையின்போது தொழிற்சங்கத்துக்கு மாமூலான அறிக்கை கொடாததும், மனுவேலின் சார்பாக அவரின் சங்கப் பிரதிநிதியை விசாரணைக்கு வரச் சொல்லாததும் வழக்கத்துக்கு மாறுன ஓர் ஆச்சரிய சம்பவமாகும். விசாரணையை நடத்திய காலி உதவி தொழில் கமிஷனரும் மனுவேல் குற்றவாளி என தீர்மானித்து அவர் தோட்டம் விட்டு வெளியேறவேண்டுமென்ற தோட்டத்துரையின் முடிவை ஆமோதித்ததாக தெரிகிறது.

தொழிற்கமிஷனர்மூலம் இத் தகராறுக்கோர சமரச மகாநாடு கூட்டவேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ரகவான பிரதிநிதி கேட்டுக்கொண்டபோது அதற்கு வரமுடியாதென தோட்டத்துரை மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. எனவே இத் தகராறுக்கு ஒரு முடிவு காணுவதற்காக "கன்ஸிலேஷன் போர்டு" ஏற்படுத்தும்படி தொழிர் கமிஷனரைக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.




## சம்பளக்குறைவு கேட்டதன் விளைவு?

### அத்துமீறிபிரவேசித்த குற்றச்சாட்டில் தொழிலாளி விடுதலை


### தலவாக்கொல்லையில் கூட்டம்

தலவாக்கொல்லை ஜில்லாவைச் சேர்ந்த திஸ்பனை, ரெட்டபூட்டு, பீக்கஸ்தை ஆகிய தோட்டங்களில் கடந்த 28-9-52 ல் ஜில்லாத் தலைவர் திரு ஏ. என். ஏ. இராஜகோபால் செட்டியார் தலைமையில் தொழிலாளர் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

ஜில்லாக் கூட்டுக் காரியதரிசிகளிலொருவராகிய திரு வீர. சேவுகப்பெருமாள் ஜில்லா உப தலைவர் திரு என. எம. மாணிக்கவாசகம் திருவாளர்கள் மருதை, முத்து ஆகியோர் பேசினர்கள்.


நான்கு தலைமுறை பரம்பரை வைத்தியமும்
40 வருட அனுபவமும் வாய்ந்த
டாக்டர் A. S. டானியல்
அவர்களின்

ஐந்தாவது சுற்றுப் பிரயாணம் பதுளை, பண்டாரவளை, ஹட்டன், நார்வுட் வாசிகளுக்கு ஓர் அரிய தருணம்.



பதுளை, 10, 11ந் தேதிகளில் ஜெமினி ஹோட்டல்.

பண்டாரவளை, 12, 13, 14 ந் தேதி நிர். 22, புகாரி ஹோட்டல்.

ஹட்டன, 15, 16-ந் தேதிகளில் கஸ்ரோ ஹோட்டல.

நார்வூட், 17ந் தேதி 99, பஜார்தெரு

ஒவ்வொரு மாதமும மேற்கண்ட இடங்களில் மேற்கூறிய தேதிகளில் தங்குவார்கள்

உங்கள் வியாதி எதுவானுலும் நேரில் தெரிந்து மருந்து பெற்று சுகமடையும்படியான அரிய தருணத்தைத் தவறவிடாதீர்கள்.

ஆயுர்வேத டாக்டர் A. S. டானியல்
மலையாள மெடிகல் ஹால்
179, செட்டியார் தெரு, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி அரசியல் பற்றிய அபிப்பிராயம்

## பகிரங்க மேடையில் வெளியிட பட்டிருப்புப் பிரதிநிதிக்கு பயமா?

மட்டக்களப்பு கழுதாவளை மக்களால் தமக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் பட்டிருப்புப் பிரதிநிதி திரு எஸ் எம். ராஜமாணிக்கம் தமது தொகுதி மக்களைப்பார்த்து "அக்காலத்தில் மக்கள் புராணங்களை வாசித்து ஏமாற்றம் அடைந்தது போல் இக்காலத்தில் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை வாசித்து ஏமாறுகிறீர்கள்" என்று ஹிதோபதேசம் செய்த விவரத்தை கடந்த வாரப் நேயர்கள் படித்திருப்பார்கள்.

ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கும் சில அரசியல் வாதிகளுக்கு அரசாங்கத்தின் அநியாயப் போக்கையும் அரசாங்கத்தின் தயவில் வாழும் அங்கத்தவர்களையும் கண்டித்து எழுதும் பத்திரிகைகளை சில சமயம் பிடிப்பதில்லை. பகிரங்கத்தில் அப்பத்திரிகைகளைத் தூஷிப்பதற்கு அவர்களுக்கு துணிவு வராவிட்டாலும் தனிமையில் நண்பர்களிடம் "கன்னாபின்னா" என்று பேசுவது வழக்கம். இப்படி இவர்கள் பேசுவதற்கு ஒரு நாட்டில் நிலவும் அரசாங்கத்திற்கும் அங்கு வெளியாகும் நேர்மையான ஒரு பத்திரிகைக்கும் உள்ள தொடர்பு, உறவு எப்படிப்பட்டதாய் இருக்கவேண்டும் என்பதை இவர்கள் அறியாதவர்களாய் இருப்பதே முக்கிய காரணமாகும்

கடந்த மாதம் பங்களூரில் மைசூர் முதல் மந்திரி திரு கே. அனுமந்தையா அரசாங்கத்திற்கும் பத்திரிகைகளுக்கும் உள்ள உறவைப்பற்றி ஒரு அருமையான பிரசங்கம் செய்தார். அப்போது கூறினர்:

"அரசாங்கம் கணவனைப் போன்றது. பத்திரிகை மனைவியைப் போன்றது மனைவிக்கும் கணவனுக்குமிடையே ஒற்றுமை இருக்கவேண்டுமானல் கணவன் காட்டாம் போக்கில் தன் இஷ்டப்படி எதையும் செய்யாமல் மனைவி சொல்வதையும் கேட்க வேண்டும் அதேபோல அரசாங்க நடவடிக்கைகளைக் கண்டிக்க பத்திரிகைகளுக்கு உரிமையுண்டு. அவற்றிற்கு செவிசாய்த்து நடக்க வேண்டியது அரசாங்கத்தனதும் அரசாங்கத்தை நடத்துவோர் ஆதரிப்போர் ஆகியோர்களின் கடமையாகும்"

மைசூர் முதன் மந்திரி பத்திரிகைகளைப்பற்றி மேற் கண்டவாறு கூறுகிறர். நமது நாட்டில் பாராளு மன்றப் பிரதிநிதி "பத்திரிகைகளைப் படியாதீர்கள்" என்கிறர்.

இந்த விஷயத்தை இவ்வளவோடு விட்டுவிட்டு திரு ராஜமாணிக்கத்திடம் கேட்கப்பட்ட கேள்விகளையும் அதற்கு அவர் அளித்த விடைகளையும் கவனிப்போம்.

கல்லோயாப் பகுதியில் எத்தனை தமிழ்க் குடும்பங்கள் குடியேற்றப்படுப? என்பது ஒரு கேள்வி.

இதற்குப் பதிலாக: 750 குடும்பங்கள் குடியேற்றப் படுவார்கள் ஆனல் எப்படிக் குடியேறுவார்கள் என்று தெரியவில்லை என பதிலிறுக்கப்பட்டது. தமிழர் முஸ்லிம் வாழும் பிரதேசமான கல்லோயாவில் குடியேற்றம் நடப்பதற்கு கேகாலையில் காணிக் கச்சேரி வைக்கப்படுவதன் மர்மத்தை இந்த கேள்விக்கு பதில் இறுக்கும்போது திரு ராஜமாணிக்கம் வெளியிடாமல் விட்டது ஏனே என்று கேட்க விரும்புகிறேம்.

அரிசி சீனி விலை உயர்வுக்கு தாங்கள் சாதகமாக இருக்கிறீர்கள் என அறிகிறேம், காரணமென்ன?

பதில்: பண்டங்களின் விலை உயர்வைபிட்டு நான் மிகவும் துக்கப்படுகிறேன் ஆனல் என்னல் ஒன்றும் செய்ய முடியாது. இன்று அரசாங்கத்திற்கு பெரும் அளவில் பணமுடை ஏற்பட்டிருக்கிறது. அவ்விதம் உயர்த்தாவிடில் அரசாங்கம் சீர்குலைந்துவிடும்.

ரொம்ப அழகான பதில். ஆனல் இத்தோடுகூட அரசாங்கத்திற்கு ஏன பணமுடை ஏற்பட்டது என்பதையும் திரு ராஜமாணிக்கம் வெளியிட்டிருந்தால் நாம் அவரைப் பாராட்டியிருப்போம் ஆனல் பொருளாதாரப் பட்டதாரியான அவர் அதைத் துணிந்து வெளியிடவில்லை. வெளியிட்டிருந்தால அரசாங்கக் கட்சியில் இருந்தும் அவர் வெளியேற வேண்டி ஏற்பட்டிருக்கலாம்

பணமுடை எற்பட்டிருக்கிறதென்பது பகிரங்க இரகசியம். ஆனல் இப்படி ஏற்பட்டதற்கு காரணம் என்ன? இன்றைய அரசாங்கத்தின் தீர்க்க திருஷ்டியின்மையும் ஊதாரித்தனமும் திட்டமிட்டு காரியம் செய்யாமையுந்தான் என்பதை திரு ராஜமாணிக்கம் மறுக்கத் துணிவாரா?

அரசாங்கம் குற்றத்தைத் தன்மீது வைத்துக்கொண்டு கஷ்ட நஷ்டங்களை ஏழைப் பொதுமக்கள் தலையில் சீனிவிலையுயர்வு என்றும் அரிசி ரேஷன் வெட்டு என்றும் கட்டியடிக்கப் பார்க்கிறது இதற்கு வக்காலத்து வாங்குகிறர் நமது இளம் பிரதிநிதி.

அடுத்த கேள்விதான் சுவாரஸ்யமானது முதன் முதலாகக் கேட்கப்பட்டது ஆனல் இதற்கு பதில் இறுப்பதைக் கடைசியாக வைத்துக் கொண்டார் திரு ராஜமாணிக்கம்

சமஷ்டி அரசியலைப் பற்றித் தங்கள் அபிப்பிராயமென்ன? சமஷ்டி அரசியலின் நன்மை தீமைகள் என்ன?

இந்தக் கேள்வியைக் கண்டதுமே அந்த வரவேற்பு கூட்டத்தில் பெரும் அளவில் சமஷ்டி வாதிகளும சமஷ்டி அனுதாபிகளும் கலந்துகொண்டிருக்கிறர்கள் என்ற விஷயம் திரு ராஜமாணிக்கத்திற்குத் தெரிந்துவிட்டது. பாதகமாகப் பதில் சொன்னல் அவர்கள் இலேசில் விடமாட்டார்கள் என்பதையும் மேலும் மேலும் கேள்விகள் போட்டு தம்மைத் திணறடித்து, அரசாங்கத்தின இன்றைய இனபேதக் கொள்கைகளையும் அம்பலமாக்கி விடுவார்கள் என்பதையும் உணர்ந்த திரு ராஜமாணிக்கம் பின்வருமாறு பதில் கூறினர்: முதல் வினவிற்கு விடை பகர நேரம் போதாது. பின் ஒரு சந்தர்ப்பத்தில் விடை கூறுகிறேன் தனிமையில் என்னிடம் கேட்டால் எப்போதும் கூறத் தயாராய் இருக்கிறேன்.

இப்படிப் பதில் இறுத்துவிட்டு அவர் அவ்வளவோடு நின்று கொள்ளவில்லை. "தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழரின் உயர்ச்சிக்கும் என்றும் உழைக்கவேண்டும் என்பதே என் அவா. அதற்கு நான் கடமைப் பட்டவனாகவே இருப்பேன் தமிழருக்கோ தமிழுக்கோ பங்கம் விளைவிக்கும் எந்த அரசியல் கட்சியிலிருந்தும் விலகிவிட நான் சிறிதும் தயங்க மாட்டேன்" என்றர்

இந்த வரையில் இவர் வீரத்தை நாம் பாராட்டத்தான வேண்டும். ஆனல் இவர் சேர்ந்திருக்கும் யு. என் பி கட்சி தமிழையும் தமிழரையும் குழிதோண்டிப் புதைக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறதென்பதை இவர் என்றுதான் உணரப் போகிறரோ?

—பாடும்மீன்

## கூற்றுவன.........

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வெண்பா ஆசிரியர் இயமனைப் பொதுப் பாவிலேயே வழங்கியுள்ளார். இயமன் என்பது என்னபால் என்பதுஞ் சந்தேகமாகத் தானிருக்கிறது?)

'என்னை கிரேதத்திரே
னுகையே கூற்றுவனுந்
தன்னேர் திரேதத்திற
சானகியே-பின்யுகத்திற
கூடுந் திரெளபதியே
கூற்றுங் கலியுகத்தில்
வீடு தோறுங் கூற்றுவ
னுமே' (நீதி வெண்பா-32)

சிலப்பதிகாரத்தில், வடநாட்டுப் போரில் சேரன் செங்குட்டுவன் செய்த போர்த் திறனைக் கூற்றுவனும் கண் கொட்டாது கண்டு வியந்தனன் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

"கங்கைப் பேர் யாற்றுக்
கடும்புனல் நீந்தி தம்
......................
ஒருநீயாகிய செருவெங்
கோலம்
கண்விழித்துக் கண்டது
கருங்கட் கூற்றம்"

இங்ஙனம் மற்றும் பல தமிழ் இலக்கியங்களிற் கூறப்பட்டிருக்கும் கூற்றுச் செய்தியே ஆராய்ந்து பார்த்தால் இன்பந்தருவதாம்

---


பம்பாய்—

உலகமெங்கும் நிரந்தர சமாதானம் 1957ல் ஏற்படப்போகிறது. அவ்வருஷமே உலக பாஷையொன்று எங்கும் ஏற்படும் என்று பிரபல முஸ்லிம் தலைவரான பஹா 'வு' இல்லாஹ்ஹின் குமாரர் அப்துல் பாஹா ஜோஸ்யம் கூறியிருக்கிறர்.

---


விலைக்கு !....................விலைக்கு !!....................விலைக்கு !!!

...யந்திர இணைக்கருவிகள்...



எங்கள் நெல்குத்தும்
யந்திரங்களுக்கும்
மா அரைக்கும்
யந்திரங்களுக்கும்
இணைக் கருவிகள்
SPARE PARTS
கொஞ்சம குறைந்த
விலையில இருக்கின்றன

தேவையானோர் தாமத
மனறி எழுதிப்பெற்றுக்
கொளளுங்கள்.

சாமுவேல் சன்ஸ் அன் கம்பெனி லிமிட்டெட்
371, பழைய சோனகத் தெரு, கொழும்பு.
தபால் பெட்டி: 46 டெலிபோன்: 2341 தந்தி எக்ஸியன்



மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதங்களானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)

இலங்கை ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11
Mfgrs: SEENU & CO., POST BOX. 1638. MADRAS-1
பிராஞ்ச்: 134, SERANGOON ROAD. சிங்கப்பூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமிய உலகம்

★ ஓர் தட்டிலே பொன்னும், ஓர் தட்டிலே நெல்லு
மொக்கவிற்கும்,
கார்தட்டிய பஞ்சகாலத்திலே தங்கள் காரியப்போர்,
ஆர்த்தட்டி வெந்தட்டி வாராமலே
அன்னதானத்துக்கு
மார்தட்டிய துரை மால் சீதக்காதி வரோதயனே!

# செத்தும் கொடை கொடுத்த சீமான் சீதக்காதி மரைக்காயர்

(ஹாஜி என். என். பிச்சை ஜே. பி; மலாக்கா)

இற்றைக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் தென்னிந்திய பௌதிக சாஸ்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இந்த சீதக்காதி பிறந்த வைரநாடு பௌத்திர மாணிக்கப்பட்டி என்றும், அது செல்வப் பொலிவுடன் விளங்கி வந்ததென்பதைக் காணலாம். இன்னும் கொஞ்சம் விளக்கம் வேண்டுமானல், மாணிக்க வியாபாரம் செய்யும் புத்திரர்களையுண்டு பண்ணும் வைரநாடு. அப்படியென்றால் அது எங்கு இருக்கிறது? அது இராமநாதபுரம் சமஸ்தானத்தை அடுத்து பத்து மைல் தள்ளி உப்பளங்கள் நிறைந்த ஹிந்து மகாசமுத்திரக கரையோரமாக இருக்கிறது. காலச்சக்கரம் சுழலுவதுபோல் அந்தப் பட்டணமும் அரபியில் பாண்டித்தியமுள்ள ஆசிரிய அறிஞர்களால் கிறுக்கரி, கிறுக்களுவென்றும், தமிழ்ப் பண்டிதர்களாலும் வித்வான்களாலும் பௌத்திர மாணிக்கப்பட்டினம் என்றும் செம்பி நகரமென்றும் வருணிக்கப்பெற்றிருக்கிறது.

### வங்க கவர்னர்

160 வருடங்களாகவே வள்ளல் சீதக்காதி பிறந்த வைரநாடு கீழக்கரை என்றே வழங்கபபட்டு வருகிறது. பொன் கொழுத்த நாடாம் கீழக்கரையில் பிறந்து வளர்ந்த சீமான் சீதக்காதி மரைககாயர் தன் பொன்கரத்தால் பொன்னை வாரி தருமமாக ஈந்து அவர் கரம் சிவந்த காலமும், முஸ்லிம் உலகில் ஞானதாதா என்று கீர்த்திபெற்றுவிளங்கும் (காயல் பட்டினம் பிறந்த) மாதிஹீர்ரசூல் அல் இமாம் ஷெய்கு சதக்கத்துல்லாஹி ஒலியுல்லா அவர்கள் கீழக்கரை வந்து வள்ளல் மரைக்காயருக்குஞான ஆசிரியராக இருந்து தங்கள் வாசஸ்தலத்தையும் கீழக்கரைக்கு மாற்றி வசித்துவந்த காலமும், வட இந்தியாவை ஆண்டுவந்த மொகலாய மன்னர்களில் ஒருவராகிய ஆலம்கீர் பாதுஷா வென்னும் ஔரங்கஜீப் மன்னர் (இவர் நீதிதவரு மன்னரும், கடவுளுக்கு ரொம்ப பயந்த சூபியாக்களில்ஒருவரும்,ராஜாங்க கஜனுவல் தன் சொந்த செலவுக்கு ஒரு சல்லிகூட எடுக்காத மன்னருமாவார்.) வாழ்ந்த காலமும் ஒரு காலம என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அது சமயம் வள்ளல்சீதக்காதியவர்கள் கீழக்கரையில ஆங்காங்கு காணப்படும் காயல் துறைகளுக்கு சொந்தக்காரராய் இருந்து தங்கள் உப்பு வியாபாரத்தை செய்துகொண்டு வந்தருக்கின்றார் ஒருசமயம் ஷெய்கு சதக்கத்துல்லாஹ ஒலியுல்லா அவர்களின் கல்வித் திறனையும அறிவு நுட்பத்தையும கேள்விப்பட்ட ஔரங்கஜீப் மன்னர் கீழக்கரையிலிருக்கும் ஒலியுல்லா அவர்களுக்கு அழைப்பு அனுப்பி வைத்து வங்காள மாகாணத்துக்கு ராஜப்பிரதிநிதியாக இருந்து வாழ்க்கை நடத்தக் கேட்டுக்கொண்டதாகவும், ஒலியுல்லா அவர்கள் அதற்கிணங்காது சிறிது காலம் டில்லி தர்பாரின் மாளிகையிலிருந்துவிட்டு கீழக்கரை வந்து தங்களின் சிஷ்யர் மரைக்காயரை டில்லிக்கு அனுப்பியதாகவும் மரைக்காயரவர்களும் வங்காளத்தில் சிறிது காலம் ராஜப்பிரதிநிதியாயிருந்து ஆட்சி நடத்திவிட்டு கீழக்கரைக்கு வந்துவிட்டதாகவும் ஒலியுல்லா அவர்களுக்கும் மரைக்காயர் அவர்களுக்கும் மன்னருக்கும் நெருங்கிய நட்பும் தொடர்பும் கடைசிவரை இருந்ததாகவும், மன்னருடைய மாளிகையில் குதிரையைத் திருடிய கள்வன் தண்டனையாக கைகளை இழந்து காயங்களுடன் கீழக்கரைக்கு மரைக்காயரிடம் வந்ததாகவும், அவரும் வந்தவனை அன்புறத் தழுவி ஆதரித்து காயங்களை ஆற்றி அவரின் முழுச் சம்மதத்தின் பேரில் ஒலியுல்லா அவர்கள் முன்னில் அறநெறி தவரு தீனுல் இஸ்லாத்தில் திருக்கலிமா சொல்லி பரிசுத்த இஸ்லாத்தில் சேர்த்து அவர் ஆசை பூர்த்தியாக சீமான் மரைக்காயர் அவர்கள் ஆஸ்திகளை அள்ளிக் கொடுத்து ஆண்டவன் வீடாகிய கஃபத்துல்லாவுக்கு ஹஜ்ஜு செய்ய சென்றதாகவும், அவர் மக்காவிலிருந்து தவம் செய்த பக்தியின் பொருட்டால் அவர் இழந்த கரம் வளர்ந்து நல்ல கைகளாகிவிட்டதாகவும் கூறப்படுகிறது


### உப்பு வர்த்தகம்

வள்ளல் மரைக்காயர் அவர்களுக்கும் இராமநாதபுரம் சேதுபதி அவர்களுக்கும் நல்ல பாந்துவியம்போன்ற நெருங்கிய தொடர்புகள் நிறைந்த கவிதைகளும், கை இழந்தவரை கதாபாத்திரமாகக்கொண்ட நொண்டிச்சிந்து என்கிற நாடகமும், சேதுபதி சீதக்காதி போஷணையில் அக்காலத்தில் ஜீவித்த புலவர்கள் இயற்றியதாயும், அவைகளுக்கு கைப்பிரதி ஏடுகளும் நிரம்ப இருப்பதாயும் கூறப்படுகிறது-புகழ் கம்பம் நாட்டிய ஸ்ரீமான் சீதக்காதி-வள்ளல் சீதக்காதி மரைக்காயர் காயல் வியாபாரத்தை (உப்பளத்தை) மிகத் திறமையுடன் நல்ல முறையில் கீழக்கரையில் நடத்திவந்த சமயம் கழக்காசியாவின் பல பெரும் துறைமுகப் பட்டணங்களுக்கெல்லாம் உப்பு ஏற்றுமதி வர்த்தகத்தால் அவருடைய சரித்திரப் பெருமை வாய்ந்த மாளிகையில் — ஆனல் இன்று தன்னுடைய பண்டைப் பொலிவு குன்றி சில பாகங்கள் இடிந்து தரைமட்டமாயும் சில வரவேற்பு வளைவுகளாகவும் (வாயில்கள்) சில கொற்றவன் கோட்டை மொட்டை நெட்டை மதில்களாகவும் சில பழையன புதியனவுமான அநேக வீடுகள் நிறைந்து நடுத்தெருவு ஒரு பகுதி இன்று கல்வீட்டுத் தெருவென்று சீர்குலைந்து கிடப்பதை காண்போர் கண் கலங்காமல் மனம் உருகாமலிருக்க முடியாது-இந்த மாளிகையில் தான் பண்டு, சீமான் சீதக்காதிக்கு பல பெரும் பட்டணங்களிலிருந்து உப்பு வாங்க ஏராளமான வியாபாரிகள் பணத்தை பெரும் பெரும் பைகளில் கொண்டு வந்து கொட்டுவதும் அதை மரக்காற் படியால் அளந்து சாக்குகளில் நிரப்பி அடைவதும் தூசி படிந்த நாணயங்களை சொலவால் கூலி ஆளகளை விட்டு புடைப்பதும் தானமென்று வந்தவருக்கும் வழிப்போக்கருக்கும் ஐடா ஆயிரம் பொன் தருமம வேண்டுமெனருல் ஐயாயிரம் பொன்னை வாரி யிறைத்த வள்ளல் சீதக்காதி வாழ்ந்த அரண்மனை தரும நிலயத்தை இந் நிலையில் கண்ட எவர்தான கண்ணீர்விடாதிருப்பர். ஆனல் அதே இடத்தில் இதே நிலையில் வடக்கு பக்கமாக ஆங்காந்து பார்த்தால் நம் மனதுக்கு சாந்தியளிக்குமவிதமாக ஓங்கி அமைதி நிலவும் பெரும சாந்தி நிலையம நம் கண்களைக் கவர்ந்துவிடும். அது எது? அதுதான் சீமான் சீதக்காதி கட்டிய என்றும் அழுக்கு அழுகு தரும் அழிவில்லா புகழ் கம்பங்களின் சிகரம் (மனரா) அதோ பிரகாசம் பொருந்திய ஜோதிச் சுவாலை நம கண்களைப் பறிக்கின்றது. ஆம். அல்லா(ஹ்) அக்பர், அல்லா(ஹ்) அக்பர், அல்லாஹ் பெரியவன் எல்லோரும் அவனை வணங்க (தொழ) வாருங்களென்றழைக்கிருர்.

### ஜோதிக் கம்பம

அதே கோபுரத்திலிருந்து தான் தினம் ஐந்துநேரமும் முஅதின், கூவி அழைக்கின்ருர் நெருஙகிப்போனல் அற்புதமான சித்திரக் கோட்டையினுள் ஆயிரக் கணக்கான பரிசுத்த ஆத்மாக்கள் அமைதியுடன் சர்வலோக சாக்ஷாத் பரம் பொருளாகிய அல்லா(ஹ்) வை புகழ்ந்து ஜெபிப்பதைக் கண் குளிரக் கண்டு மகிழலாம். சற்று தெற்குப் பககமாகப் பார்த்தால் வள்ளல் சீதக்காதி மரைக்காயருடைய பரிசுத்தமான சாந்தி நிகேதனத்தை (கபுருஸ்தானை) எளிய மதில்களையுடைய திறந்த வெளியில் பார்க்கலாம். அவர் கட்டிய ஜோதி கம்பத்திலிருந்து சுரந்து வரும் ஆனந்த வெள்ளப் பிரவாகததை அருந்திக் கொண்டிருப்பதைப்போலும் காணலாம். இதுவன்ருே அழிவிலலா ஆனந்தம். ஆனல அவருடைய கபுருஸ்தான் தேடுவாரற்று கிடக்கிறது. அவர் தனக்கென வாழா பிறர்க்குரியவரான தயாளமூர்த்தியான தால் சுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்திருல் தனக்கென ஒரு சமாதிக் கூடத்தை கட்ட மறந்துவிட்டாரா? மார்க்க சட்டப்படி நடந்தார் என்பதை நிதரிசனமாய் காட்டிக்கொண்டாரா? வடபுறமாக தலைப்பக்கம் அவருடைய ஆத்மீக குருநமஹான் ஷெய்கு சதக்கத்துல்லா ஒலியுல்லா அழகிய சமாதி ரதத்தினுள் பொன் மயமாய் ஜொலிக்கும் பல்லக்கு பேழையின்மீதமர்ந்து பூமிக்குமேல் தங்களுடைய விசுவாசமுள்ள சிஷ்யருக்கு சொர்க்கானந்தத்தின் இன்பங்களை எடுத்துக்காட்டுவதுபோல் காக்ஷியளிக்கின்றது. இதற்கு மத்தியில் புகழ் கம்பத்தின் கீழ்வாயில் மத்தியில் மூன்று வர்த்தகத் தலைவர்களின் சமாதிக்கூடமாகிய நீண்டு வளர்ந்த கருங்கல் வச்ரத் தூண்களால் எழுப்பப்பட்ட முத்துச்சாவடி அமைந்திருப்பது கொற்றவன் சீதக்காதி கட்டிய சொர்க்க கோட்டையின் வாயிலுக்கு குடைப் பிடித்து நிற்பது போல தோற்றமளிக்கின்றது கம்பத்தினில் கருங்கல் சித்திர வேலைப்பாடுகளின திறமை ஒருபக்கமிருக்க ஆங்காங்கு அழகுபடுத்தும் மாலைகளாக இடப்பட்ட கருங்கல் சங்கிலித் தொடர்பும் நம் நகரத் தலைவர்களாகிய கீர்த்தி வாய்ந்த முன்னேர்களின் ஒற்றுமையின மாண்பை இவர்கள் மரணமடைந்து 200 ஆண்டுகளாகியும் எடுத்துக்காட்டுகிறது ஐக்கியத்தின சிறப்பை அறிவுறுத்திக்கொண்டிருக்கிறது. ஆனல் இந்த யுகத்திலே நம் பாட்டன் காலத்திலே அந்த கர்ணனையும் கொடையில் வென்ற மன்னனெருவன் இப்புவியில் அவதரித்ததுண்டா என்ருல், ஆம், உண்டு அவர்தாம "சீமான் சீதக்காதி' இவர் புகழை ஆயிரம மைலுக்கப்பாலுள்ள ஏழுகுமரையுடைய வயோதிகப் புலவர் கேட்டு கொடைவள்ளல் பேரில் கவிதை பாடிக்கொண்டு வந்துகொண்டிருக்கிருர். மரைக்காயருக்கு அல்லாவின் கட்டளைப்படி அழைப்பு வந்துவிட்டது. நானிறந்துபோவேன். என்னை அடக்கம் செய்யும்போது என் கையில் கிடக்கிற விலைமதிக்கவொண்ணுத (கணையாழி) மோதிரததைக் கழட்ட வேண்டாமென்று சொல்லி உபாத்தாகி அடக்கம் செய்துவந்த ஊரார்கள் திரளாகக் கூடி இருந்த வீட்டுக்கு அவ்வயோதிகப பெரியார்வந்து மரைக்காயர் மரணங் கேட்டு திடுக்குற்று மெய் மறந்து மூர்ச்சையாகி தெளிந்து அப்பால் ஊரார் சகிதம் கபுருஸ்தான் (அடக்கம் செய்த இடம்) போய் புலவர் பெருமான் மனம் நொந்து பாடியதும் கபுரை துளைத்துக்கொண்டு சீமான் சீதக்காதி கணையாழி வெளி வந்ததும் அதை புலவர் பெற்றுக்கொண்டு அப்போதிருந்த சேதுபதி மன்னரிடம் கொடுத்து எத்தனையோ லக்ஷம திரவியம வாங்கிக்கொண்டு தன் சுயதேசம சென்றதாக முதியோர் சொல்கிறது நம்பத்தக்கதே.

(தொடரும்)



புனித நகரம் மெக்காவுக்கு யாத்திரை சென்ற 3,768 முஸ்லிம் யாத்ரீகர்கள் இடைவழியில் பெய்ரட்டில் விடப்பட்டு மேற்கொண்டு பிரயாணம்செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். லெபனுன் சர்க்காரின் வேண்டுகோளின்மீது அமெரிக்க ஆகாயப் படையைச் சேர்ந்த பிரமாண்ட மான விமானங்கள் உடனேபெயிரட்டுக்கு அனுப்பப்பட்டன யாத்திரீகர்கள் திருகு-ஆனை வாசித்த வண்ணம் அந்த விமானமொன்றில் ஏறுவதைப் படத்தில் காண்க. அவர்கள் ஜிட்டாவில் இறங்கி புனித நகரத்திற்கு சரியான சமயத்தில் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### வாழ்க குயுக்தி!

சென்ற 14-9-52 'சுதந்திரன்' "கேட்டுப் பாருங்கள்" என்ற பகுதியில் அன்பர் குயுக்தியார் அவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் சம்பந்தமாக ஒருவர் கேட்ட கேள்விக்கு அளித்த பதில் மிகவும் பாராட்டத்தக்கதும், உண்மை நிறைந்த ஒரு பெரும் பொக்கிஷம் மட்டுமல்ல, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஓர் சிறந்த வழிகாட்டியுமாகும். தீண்டாமை இந்து மதத்தில் அபரிமிதமாக இருந்தாலும் மற்ற மதங்களிலும் அது இல்லாமலில்லை என்பதற்கு குயுக்தியாரின் மேற்படி வாசகம் அருமையான ஓர் உண்மை எடுத்துக்காட்டு.

மதத்தில் இருந்து தீண்டாமையை ஒழித்துவிடக் கஷ்டப்படுவதில் பயன் இல்லை. ஏனெனில் மதம் இருக்கும்வரை தீண்டாமையும் இருக்கத்தான் செய்யும் மத மாற்றங்களினால் தீண்டாமை ஒழியமாட்டாது என்பதும் உண்மை தாழ்த்தப்பட்டோர் நிலை மதங்களினால் உயர்வடைய மாட்டாது. அவர்களின் உயர்வு அவர்களில்தான் தங்கியிருக்கிறது. அதற்கு குயுக்தியார் காட்டும்பாதை ஓர் சிறந்த உண்மையான வெற்றிப் பாதை. தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் அவ்வழியைக் கடைப்பிடித்தால் சீக்கிரம் உயர் நிலையை அடைவார்கள் என்பது நிச்சயம். எனவே ஒதுக்கப்பட்ட சமூக மக்கள் அனைவரும் அவரது அந்த அருமையான வாசகத்தைப் பின்பற்றி அதைச் செயற்படுத்தும்படி அவர்களை வேண்டுகிறேன். குயுக்தியாரின் அந்த வார்த்தை, அந்தப் பாதைதான் என்ன?

"தாழ்த்தப்பட்டோர் நிலை சம்பிரதாய சமய மாற்றத்தால் உயர்ந்துவிடாது அந்தச் சமூகமே விழித்தெழுந்து கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறுமானால் நிலையில் பரிபூரண மாற்றம் ஏற்படும்" இதுபோன்ற அருமையான அறிவுரைகளை மக்களுக்குஅடிக்கடி அளிக்கும் குயுக்தியார் வாழ்க! தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் அதிக அக்கறை செலுத்திவரும் "சுதந்திரன்" நீடூழிவாழ்க!!

செ. கபிரியல்
43, பார்ன்ஸ் பிளேஸ்,
கொழும்பு.

---

### உரிமைப் போரை ஒடுக்க புது சட்டம

ஜோஹன்னஸ்பர்க்— தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் சத்தியாகிரகத்தை சமாளிப்பதற்கு புதிய சட்டம் இயற்றப்படும் என்று மலான் சர்க்காரிலுள்ள இரண்டு மந்திரி தெரிவித்தார்கள்.

சுதந்திரன்
SUTANTIRAN
194வ, தடடாதெரு போன்: 3411
1952 ஒக்டோபர் மீ 5உ

# குமாஸ்தா பரீட்சை

அரசாங்க குமாஸ்தா பரீட்சையை மூன்று வருடங்களுக்கு ரத்துச் செய்யும்படி பொக்கிஷ இலாகா சிபார்சு செய்யப்போகிறதாம். அரசாங்கம் சிக்கனத்தை முன்னிட்டு இச்சிபார்சை ஏற்றுக் கொள்ளலாமென்று நம்பப்படுகிறது

நாட்டிலே படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறதென்பதும், அது வருடத்திற்கு வருடம் விஸ்வரூபமெடுத்து வருகிறதென்பதும், இன்றைய ஆட்சியாளர் முக்கியமான இந்த பிரச்னையைத் தீர்க்க முடியாமல் திணறுகின்றனரென்பதும் பகிரங்க இரகசியம். அவர்கள் எந்த ஒரு சமுதாயப் பிரச்னையையும் தீர்ப்பதற்குப் பதிலாக அதனை பிரமாண்டமான முறையில் வளர்த்துவிட்டு வேடிக்கை பார்ப்பதில் சமர்த்தர்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயம் அவர்களின் கோணல் மாணல் திட்டங்களும் தாறுமாறான கண்ணோட்டமும்தான் இதற்குக் காரணங்கள்.

வருடந்தோறும் சுமார் 20 000 மாணவர்கள் எஸ் எஸ் ஸி (இப்போது ஜி ஸி ஈ) பரீட்சை எழுதுகின்றனர். அவர்களில் 5000 பேருக்குக் குறையாமல் அரசாங்கக் குமாஸ்தாக்களாகிவிடுகின்றனர் இந்த நிலையில் மூன்றாண்டுகளுக்கு குமாஸ்தா பரீட்சை ரத்துச் செய்யப்பட்டால் சுமார் 15,000 படித்த வாலிபர்கள் வேலையில்லாத பட்டாளத்துடன் சேர்ந்து விடுவார்கள்.

இலாகாகளுக்கு குமாஸ்தாக்கள் இன்னும் அதிகமாகத் தேவைப்படும்போது அரசாங்கம் இவ்வாறு செய்ய முற்படுவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது உதாரணமாக, தலைமைத் தபால் காரியாலயத்தில் பொது விடுமுறை தினத்தன்றுகூட குமாஸ்தாக்களுக்கு விடுமுறை கொடுப்பதில்லை. குமாஸ்தாக்களின் பற்றாக் குறைதான் இதற்குக் காரணமாகும் ஆதலின் சிக்கனத்தின் மீது பழியைப் போட்டு புதிதாக குமாஸ்தாக்களைச் சேர்ப்பதை நிறுத்தினால், வேலையில்லாத் திண்டாட்டம் உக்கிரமாவது மட்டுமின்றி, ஏற்கனவேயுள்ள குமாஸ்தாக்கள்மீது அதிகமான வேலைப் பளுவைச் சுமத்த வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். இது எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்ப்பதுமட்டுமல்ல புதிய நெருக்கடிகளை சிருஷ்டித்து விடுவதுமாகும். எல்லாவற்றிற்கும் "சிக்கனப்" என்ற போர்வைக்குள் மறைந்துகொள்வது புத்தி சாதுரியமான செயலாகாது.

# முஸ்லிம்களும் சிங்களமும்

கல்லூரிகளில் படிப்படியாகத் தமிழ் வகுப்புகளை மூடி, தமிழ் மாணவர்கள்மீது சிங்களம் திணிக்கப்படுகிறதென்றும், இது தமிழர்களைச் சிங்களவராக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியென்றும் கடந்த மாதம் 7-ந் தேதி சுதந்திரன் இதழில் ஆசிரியத் தலையங்கம் எழுதியிருந்தோம் அதற்கு மற்றொரு அசைக்கமுடியாத ஆதாரம் இப்பொழுது கிடைத்திருக்கிறது.

கப்பளை சாஹிராக் கல்லூரியில் தமிழ் வகுப்பு மூடப்பட்டு முஸ்லிம் மாணவ, மாணவிகள் சிங்களம் கற்றுக்கொள்ளுகின்றனரென்ற செய்தி பிறிதொரு பத்தியில் பிரசுரிக்கப்படுகிறது. சிங்களம் பயிலாவிட்டால் எதிர்கால இலங்கையில் முஸ்லிம்களுக்கு இடமிருக்காதென்றும், அரசாங்க உத்தியோகம் பெறமுடியாதென்றும் அக் கல்லூரி ஆசிரியர் குழாம் கருதுகிறதாம். அரசாங்கத் திட்டத்தை அவர்கள் சரிவர புரிந்துகொண்டிருக்கின்றனர். சிங்களம், தமிழ் இரு மொழிகளும் அரசாங்க மொழிகளாக்கப்படுமென்பது சுத்த ஏமாற்று என்பதையும், சிங்களம் மட்டுந்தான் அரச கரும மொழியாகுமென்பதையும் அவர்கள் உணர்ந்திருக்கின்றனர். அந்த வகையில் அவர்களைப் பாராட்ட வேண்டியதே.

ஆனால் தமிழ் மொழி அழிந்துபோவதால், தமிழ் பேசும் முஸ்லிம் இனமும் அழிந்துபோகுமென்பதை முஸ்லிம் பெருமக்கள் தெளிவாக உணரவேண்டும். அதுமட்டுமன்று முஸ்லிம் பிள்ளைகள் தமிழ் மொழியைப் பயிலாவிட்டால் தங்களின் சமய அறிவைப் பெறுவது கடினமாகிவிடும். இஸ்லாம் சம்பந்தப்பட்ட சமய நூல்கள் பெரும்பாலானவை தமிழில் வெளிவந்திருக்கின்றன. இஸ்லாமிய நூல் ஒன்றுகூட இதுவரை சிங்களத்தில் வெளிவரவில்லை. இந் நிலையில் தமிழைத் தலை முழுகிவிட்டு சிங்களம் மட்டும் கற்றுக்கொள்வதில் ஏற்படக்கூடிய ஆபத்து காத்திருக்கின்றதை முஸ்லிம் மக்கள் நன்கு உணர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களென்று நம்புகிறோம்.

# ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இலங்கை விஜயம்

இன்றையத் தமிழ் உலகில் சுவாமி சுத்தானந்த பாரதியாரைத் தெரியாதவர்கள் தமிழ் தெரியாதவர்கள் என்றே சொல்லவேண்டும்.

தமிழ் அன்னைக்கு சுவாமிகள் செய்திருக்கும் தொண்டு அளப்பரிது. தமிழன்னைக்காகவே துறவுபூண்டு தமது உடல் பொருள் சக்தி அனைத்தையும் அவள் திருப்பாதங்களில் அர்ப்பணித்து நூற்றுக்கணக்கான இலக்கிய மலர்களால் அவளை அலங்கரித்து அழகு பார்த்து மகிழ்பவர் சுத்தானந்தர்.

சுவாமிகள் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக்கு விஜயம் செய்வதாகவிருந்தார்கள் எதிர்பாராத காரணங்களால் அது நிறைவேறவில்லை சில மாதங்களுக்குமுன்பு மலாயா செல்லும் மார்க்கத்தில் சில தினங்கள் கொழும்பில் தங்கிச் சென்றார்கள்.

அப்போது சுதந்திரன் சார்பில் அவரிடம் கேட்கப்பட்ட ஐந்து வினாக்களுக்கு அவர் அளித்த ஆணித்தரமான, அற்புதமான, ஹாஸ்யமான விடைகளை நமது சுதந்தரன் நேயர்கள் படித்து மகிழ்ந்தார்கள்

இப்போது சுவாமிகள் மலாயா, ஜப்பான் முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு திரும்பும் மார்க்கத்தில் இலங்கைக்கு விஜயம்செய்து சில வாரங்கள் தங்கி தமிழர்கள் வதியும் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யவும், ஈழத்து க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போகவும் திட்டமிட்டுள்ளார்கள் என்று அறிகிறோம்

ஒக்டோபர் மாதம் 9-ந் தேதி சனிக்கிழமை விமான மார்க்கமாக சுவாமிகள் கொழும்புக்கு வந்துசேரத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

### கொழும்பில்

கொழும்பில் சுவாமிகளுக்குப் பிரமாதமான வரவேற்புகள் பல இடங்களில் நடைபெறும். பல ஸ்தாபனங்களும் சங்கங்களும் இதில் கலந்துகொள்ள பேரார்வத்தோடு முன்னிற்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக சுவாமிகளுக்கு கொழும்பு மாநகரசபை ஒரு பொதுஜன வரவேற்பை அளிக்க தீர்மானித்திருக்கிறது இதற்காக ரூபா 1000 ஒதுக்கப்பட்டிருக்கிறது

### திரிகோணமலையில்

கொழும்பு மாநகர சபையின் முன் மாதிரியையொட்டி திரிகோணமலை நகர சபையும் சுவாமிகளுக்கு ஒரு பொதுஜன வரவேற்பு அளிப்பதென தீர்மானித்திருப்பதைப் பாராட்டுகிறோம். நகரசபையின் வரவேற்பைத் தவிர இதர ஸ்தாபனங்கள் பலவும் சுவாமிகளுக்கு வரவேற்பளிக்கத் திட்டமிடுவதாக நமக்கு கிடைக்கும் கடிதங்கள் கூறுகின்றன.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் சுவாமிகளை வரவேற்கும் ஒழுங்குகளை ஆலோசிப்பதற்கு கடந்த வாரம் சைவ பரிபாலன சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் ஒரு சபை கூடியதாக வைத்திஸ்வர வித்தியாலய அதிபர் திரு ச. அம்பிகைபாகன் அறிவிக்கின்றார். இச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட திரு க இராமச்சந்திரன், சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் ஒரு வார காலந்தான் தங்கமுடியும் என்று தெரிவித்ததாகவும், ஆனால் யாழ்ப்பாணத்தில் சுவாமிகளை வரவேற்பதற்காக பல்வேறு ஸ்தாபனங்களும் கல்வி நிலயங்களும் செய்யும் ஏற்பாட்டைப் பார்க்கையில் இரண்டு வார காலமாவது அவர் யாழ்ப்பாணத்தில் தங்கவேண்டுமென்று கேட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. இறுதியில் 10 நாட்களுக்குரிய நிகழ்ச்சித் திட்டமொன்று வகுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் சுவாமிகளின் வரவை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் என்றும் சங்கங்களும், சபைகளும், மதஸ்தாபனங்களும் பாடசாலைகளும்

[14-ம் பக்கம் பார்க்க]

---

# கள்ளக் குடியேற்றத்துக்கு இந்திய சர்க்காரின் தடை

இந்தியர்கள் சட்டவிரோதமாக இலங்கைக்கு கள்ளத்தோணியில் போவதைத் தடை செய்வதற்கு தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கும்படி, மண்டபம் தூத்துக்குடி புரொரெக்டர்களுக்கு இந்திய சர்க்கார் உத்தரவிட்டதையொட்டி கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சென்னை குடியேற்ற வெளியேற்ற கட்டுப்பாட்டதிகாரியின் அறிக்கையொன்று கூறுகிறது.

இந்நடவடிக்கைகளின் விளைவாக பலர் கைதியாகியிருக்கின்றனர். கடந்த இரு வாரங்களில் இலங்கைக்கு கள்ளத் தோணியில் போக முயற்சி செய்துகொண்டிருந்த 8 பேர் ஒரு ஏஜண்டுடன் ராமநாதபுரம் கடற்கரையில் கைதி செய்யப்பட்டார்கள். ராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களில் கள்ளக் குடியேற்றக்காரர்களைக் கண்டுபிடிப்பதில் இந்திய அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது பிரஸ்தாப புரொரெக்டர்கள் போலீஸார் உதவியுடன் பலவிடங்களைச் சோதனைபோட்டு வருகின்றனர். ஆறுமுகநேரியைச் சேர்ந்த தேவசகாயம் நாடார் என்ற கள்ளத் தோணிக்கு ஆள் சேர்க்கும் ஏஜண்டு செப்டம்பர் 5ந் தேதி திருநெல்வேலி சப் மாஜிஸ்ட்ரேட்டால் ஒரு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். மற்றும் ஆறு பேர் ரூ 20 வீதம் அப

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகவங்கி அறிக்கைமீது திரு ஜீ. ஜீ. பாய்ச்சல்

## அவர்மீது ஏரிக்கரைப் பத்திரிகைகள் பாய்ச்சல்

### குருட்டுத் திட்டங்களினல் பொதுப்பணம் பாழ்

இலங்கைப் பொருளாதார நிலைபற்றி உலக வங்கிக் கமிஷன் சமீபத்தில் சமர்ப்பித்த அறிக்கையை தற்போது அமெரிக்காவிலிருக்கும் கைத்தொழில் மந்திரி திரு ஜீ ஜீ. பொன்னம்பலம் வன்மையாகக் கண்டித்திருக்கிருர் அவரது கண்டனங்களைமிகக்கடுமையான பதங்களால் கண்டித்திருக்கின்றன ஏரிக்கரைப் பத்திரிகைகள்.

இலங்கை அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கையின் குற்றம் குறைகளை எடுத்துக் காட்டும் உலக வங்கி அறிக்கை அரசாங்கத் தொழிற்சாலைகளில் நடைபெறும் யதேச்சாதிகார நிர்வாகம் தொழிற்சாலை வளர்ச்சிக்கு குந்தகம் விளைவித்து விட்டதென்று கூறுகிறது.

அரசாங்கம் பெரிய பெரிய கனத் தொழிற்சாலைகளில் ஏராளமான மூலதனத்தை முடக்காமல் தனப்பட்டவர்களின் மூலதனத்தைக் கொண்டு அத்தகைய தொழிற்சாலைகள் அபிவிர்த்தியடைய ஊக்கமளிக்க வேண்டும் என்றும், அரசாங்கம் அதில் ஒரு பங்குதாரராக மட்டும இருக்கலாமென்றும் பிரஸ்தாப கமிஷன் ஆலோசனை கூறுகிறது.

ஏராளமான நிபுணர்களையெல்லாம் வரவழைத்து பணத்தைக் கோடி கோடியாகக் கொட்டித் தனது இலாகாவால் ஆரம்பித்திருக்கும் கனத் தொழில்கள் மீதும் தனது தொழிற் கொள்கைமீதும் உலக வங்கிக் கமிஷன் போர்தொடுத்திருப்பதைக் காண தொழில் மந்திரி திரு ஜீ. ஜீக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. "எனது தொழில்களைக் கண்டிக்க இவர்கள் யார்?" என்ற ரீதியில் அவர் உலக வங்கிக் கமிஷன்மீது பாய்ந்திருக்கிருர். இந்த அறிக்கையை வன்மையாகக் கண்டிக்கும் அவர் உலக வங்கிக் கமிஷன் நுனிப்புல் மேய்ந்திருக்கிறது என்று ஆத்திரம் தீர திட்டுகிருர். "இந்த அறிக்கை ஆழமற்றது, தவருன விபரங்களைக் கொண்டது. சாஸ்திர ரீதியான கண்ணேட்டமில்லாத பொதுப்படையான கூற்றுக்களை உடையது. திட்டவட்டமான ஆக்கயோசனைகளில்லாதது உதவாக்கரையானது' என்றெல்லாம் அவர் பிரஸ்தாப அறிக்கையை அமெரிக்காவில் வைத்துக் கண்டித்திருக்கிருர்.

இத்துடன் அவர் நிற்கவில்லை. உலக வங்கித் தலைவர் திரு எயுஜின் பிளாக்கையும், அறிக்கைக்கு ஜவாப்தாரிகளான இதர நிபுணர்களையும் சந்தித்து தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துவிட்டாராம்!

தொழில் இலாகா கொள்கையை உலக வங்கிக் கமிஷன் கண்டிக்க, கமிஷனை திரு ஜீ. ஜீ. கண்டிக்க, அவரை ஏரிக்கரைப் பத்திரிகைகள் கண்டிக்க ...

களில் இந்த அறிக்கையை கண்டித்தவர் திரு ஜீ ஜீ. மட்டுமல்ல சேர் ஜோன் கொத்தலாவலயும், திரு புலன்தளம திஸாவையும் அறிக்கையை வன்மையாக கண்டித்திருக்கின்றனர். ஆனல் அவர்களைப்பற்றி இப்பத்திரிகைகள் மூச்சு விடவில்லை திரு பொன்னம்பலம் கண்டித்ததும், அவைகள் வரிந்து கட்டிக் கொண்டு அவரைத தாக்கத் தொடங்கிவிட்டன அவரை நன்ருகத் திட்டி

கண்ணுடி, மீன்பிடிக் கப்பல் ஆகியவற்றை கைவிட இப்பொழுதே அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது. அவைகளுக்காக பொதுப்பணம் ஏராளமாக ஏற்கனவே செலவு செய்யப் பட்டிருக்கிறதே, எத்தனையோ நிபுணர்கள் வரவழைக்கப் பட்டார்களே? அந்தப்பணம் முழுவதும் விழலுக்கிறைத்த நீரென வீணுகிவிட வேண்டியதுதானு? ஒரு பொறுப்பற்ற அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் கண்மூடித் தனமான திட்டங்களைக் கொண்டு தொழிற்சாலைகள் ஆரம்பித்தால், பொதுப்பணம் விரயமாகாமல் வேறு என்னவாகும்?

## மந்திரி பொன்னம்பலத்திற்கு நற்சாட்சி!

"உலக வங்கியின் அபிப்பிராயங்கள் உலகத்தவரின் மதிப்பிற்குரியன உலகம் அதன் அபிப்பிராயத்தை மதித்து வருகிறது............ இவ்வித மதிப்பிற்குரிய உலகவங்கித் தூது கோஷ்டியின் சிபார்சுகளைக் குறித்துக் கைத்தொழில் மந்திரி தாறுமாருன அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது மிகவும் பொறுப்பற்றதன்மையாகும் பொறுப்பில்லாத இந்த அபிப்பிராயங்களை எவரும் ஒரு பொருட்டாகக் கருதமாட்டார்கள் என்பது திண்ணம். ஏனெனில் கைத்தொழில் மந்திரி தமது பதவி நிர்வாகத்தில் எவ்விதமான உருப்படியான சாதனைகளையும் சாதித்து விடவில்லை. அவரது பதவி நிர்வாகம்பற்றி அடிக்கடி கண்டனங்களே வெளிவந்துள்ளன"

இப்படி நாம் சொல்லவில்லை. ஏரிக்கரைப் பத்திரிகைகள் ஆசிரியத் தலையங்கம் தீட்டுகின்றன மந்திரியாருக்கு அருமையான நற்சாட்சி!

ஆசிரியத் தலையங்கம் எழுதியிருக்கும் அந்தப் பத்திரிகைகள் அவர் கையாலாகாத உதவாக்கரை மந்திரியென்றும், பொறுப்பற்றவரென்றும் தீர்ப்புக் கூறிவிட்டன (ஏரிக்கரையின் அபிப்பிராயமே யு. என் பி. அபிப்பிராயம் என்பதை ஏற்கனவே பன்முறை விளக்கியிருக்கிறோம்) ஆகவே உலக வங்கிக் கமிஷன் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு திரு ஜீ. ஜீ. யின் பதவிக்குச் சீட்டுக் கிழிக்க முயற்சிகள் நடைபெறலாம்.

ஆனல் நம் மந்திரிகள் "அரிச்சந்திரர்"களாக இருப்பதால், திரு பொன்னம்பலமும் அமெரிக்காவிலிருந்து வந்ததும் வராததுமாக 'அவ்வறிக்கையைப் பற்றி தான் அவ்வாறு ஒன்றும் கூறவில்லை' என்று மறுத்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கைத்தொழில் இலாகா ஏற்கனவே போட்டுள்ள திட்டங்களில் இரும்பு, டி.டி. ரி, காஸ்டிக் சோ...

## கனம்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னம்பலம் கடற்றெழில் மந்திரியாகவும் ஆக்கப்படலாமாம்.

என்னதான் நடைபெற்றாலும் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் மட்டும் யு. என். பியைவிட்டு வெளியேற மாட்டார் என்றே நம்பப்படுகிறது. அவர் விலக விரும்பினலும் விலகமுடியாதபடியான கால்கட்டுகள் பல அவருக்கும் டட்லிக்கும் இடையில் இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

சமீப காலத்தில் திரு டட்லிக்கும் சேர் ஜோனுக்கும் ஏற்பட்டிருக்கும் திடீர் அந்நியோன்னியம்தான் திரு பொன்னம்பலத்தின் சங்கடங்களுக்கு காரணம் என அபிப்பிராயப்படுவதில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆயினும் திரு பொன்னம்பலம் திரும்பி வரும்போது பல சங்கடங்கள் அவரை ... இருக்கின்றன என்பது மட்டும் திண்ணம்.

## மூன்று வருடங்களுக்கு குமாஸ்தா பரீட்சை ரத்து?

அடுத்த வருடம் தொடக்கம் அரசாங்க குமாஸ்தாக்களைப் புதிதாகச் சேர்ப்பதில்லை என அரசாங்கம் முடிவு செய்யலாமென்று தெரிகிறது.

அடுத்த வருடம் முதல் மூன்று வருடங்களுக்கு அரசாங்க குமாஸ்தாக்கள் பரீட்சை நடத்துவதை நிறுத்திவிட வேண்டுமென்று பொக்கிஷ இலாகா ஆலோசனைகூறியிருக்கிறது.

இது பொருளாதார சிக்கனத்தை உத்தேசித்து எடுக்கப்படும் நடவடிக்கையாயிருப்பினும், இதனல் வேலையில்லாத திண்டாட்டம் அதிகரிக்குமென்று அஞ்சப்படுகிறது.


உங்களுக்கு நேரும் நன்மை தீமைகளை நீங்களே அறியக்கூடிய முறையில் புதிதாய் வெளிவந்த

**அரிய சோதிட நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| பிரமரகசிய சோதிட அரிச்சுவடி 1 முதல் 4 பாகங்கள் | 1-00 | சம்பூர்ண ரேகை சாஸ்திரம் | 5-00 |
| டி 5-ம், 6-ம் பாகங்கள் | 1-00 | சினேந்திரமாலை உரையுடன் | 2-00 |
| டி 7, 8, 9ம் பாகங்கள் | 1-00 | சூடாமணி உள்ளமுடையான் | 2-00 |
| நூதன பெரிய சோதிட அரிச்சுவடி 1-4 | 2-50 | சோதிட சிகாமணி | 8-00 |
| குமாரசாமியம் -உரை | 3-50 | ருதுநூல் | -25 |
| வருஷாதி நூல் | 2-50 | பெரிய ருதுநூல் சாஸ்திரம் | 1-25 |
| அநுபோக சாதக ரகசியம் | 2-50 | அஷ்டதிக்காரூடம் | 1-50 |
| சந்திரகாவிய உரை | -75 | கணேசர் ஆரூடம் | 1-50 |
| சாதகணிதாமிர்த உரை | -75 | ஆரூட சிந்தாமணி | 1-25 |
| ஹஸ்தரேகை சாஸ்திரம் | 1-00 | கனவின் பலாபலன் | 1-00 |
| அனுபவ ஹஸ்த ரேகை சாஸ்திரம் | 3-50 | மனையடி சாஸ்திரம் | 1-25 |
| | | சாதகாலங்கார உரை | 4-50 |
| | | வீமகவி உரையுடன் | 1-50 |
| | | திசா புத்தி அந்தர பலன் | 1-50 |

தபாற் செலவு ப்ரத்தியேகம்

**சரஸ்வதி புத்தகசாலை**

175, செட்டியார் தெரு. கொழும்பு.




**இரும்புப்பணப்பெட்டிகள்**

---o---

லண்டன் நகர ஜோண்டான் லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை.

1795-ம் ஆண்டில் ஸ்தாபிதம் - மிகப் பழைய ஸதாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை

**டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.**

ஆபீஸ் பொருட்கள் விற்பனை பகுதி
18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை கொழும்பு

போன்: 2301


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ★ வேஷதாரி வேலாயுதம்

எம். எஸ். பாலு

ஒருவர்:- என்ன விறு விறுப்பு; என்னபேச்சோட்டம்: எவ்வளவு அழகாகப் பேசுகிறார்? அப்பேச்சில்தான் புதைந்திருக்கும் புதுமைக் கருத்துக்களைத் தணே? ஆகா! அற்புதமான மனிதர்தானப்பா"

அடுததவர்:- "யாரு நம்ம நீரர் சத்தியமூர்த்தியைப் பற்றிக் கூறுகிறீர்களா? அவர்தான் சண்டமாருத மாச்சே!

முன்னவர்:- 'போய்யா, சத்தியமூர்த்தியும் ஒங்க சண்டமாருதமும்; அவங்கெல்லாம் அந்தக்காலமய்யா. இந்தக் காலத்தில் இளம் எழுத்தாளரும், பேச்சாளரும் ஒருவர் நம்ம நாட்டில் இருக்கிறார் என்றால் அது நம்ம வேலாயுதந்தான் தெரியுமா?"

இரண்டாவது நபர்:— "யாரு! அந்தப் பத்திரிகைகளிலெல்லாம் உலகத்தைப் பார்த்துக் கேட்டுச் சமூகத்துக்குச் சாட்டை கொடுக்கிறாரே! அந்த வேலாயுதமா?"

முன்னவர்:- 'ஆமாம்; வேறு யார்? அந்தச் சமூக சீர்திருத்தவாதி வேலாயுதந்தான்; அவர் நீடுழிவாழணும்'

இவை தெருக்களில், திண்ணைகளில் பேசிக்கொள்ளும் பிரசாரச்செய்தி இது.

'...30-1952 கொழும்பு. இந்நாட்டின் இலக்கிய மன்னன், எழுத்தாளர் மத்தியில் இளங்கோவன், இளைஞர் உள்ளத்தில் இரும்பரசன் தோழர் வேலாயுதம் அவர்கள் இன்று முன்னேற்றப் பெண்களால் நடத்தப்படும் 'அறிவு மன்ற'த்தில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்:- இளமை ஊற்றெடுத்தோடும் எதிர்காலத் தாய்மார்களே, சகோதரிகளே, வணக்கம். நாமும் நீங்களும் சேர்ந்து கதர்கட்டி காடத்தனம் பண்ணும் கயவர்களை, விபசாரத் தீயில் குதித்து வீண் நோய்க்குள்ளாகும் வீணர்களை, மதுவருந்தி மதியிழந்து மயக்கத்திலாழ்திடும் மடையர்களை, போலி வேஷந்தரிக்கும் போக்கிரிகளை, கண்டகண்ட கன்னியர்களுடன் கண்ணியமுள்ளவரைப்போல் நடித்துக் கழங்கமில்லா அக்கன்னியரின் கற்பைச் சூறையாடும் காடையர்களை, அவர்களின் இந்த அக்கிரமங்களை எதிர்த்துப் போர்டவேண்டும் இவர்களைச் சும்மா விட்டு வைக்கக் கூடாது. அவர்களுக்குப் பகிரங்கமாகப் பத்திரிகைகளிலும் பேச்சு மேடைகளிலும் சரியான சாட்டை கொடுக்க வேண்டும்' எல்லாவற்றுக்கும் மேலாக ஏழைகளின் இரத்தத்தையுறிஞ்சி இன்ப போகமனுபவிக்கும் இந்தக் கள்ளமார்க்கட் கடவுள்களைச் சித்திரைவதை செய்யவேண்டும். இன்னும் சற்று முன்னுக்குபோய் சுட்டுத் தள்ளவேண்டும். அவர்கள்தான் நாட்டில் பசியும், பட்டினியும், வறுமையும் தாண்டவமாடக் காரண கர்த்தாக்கள் ஆகையால் சிறிதும் இந்தக் கள்ளமார்க்கட் காரருக்கு இரக்கங் காட்டக் கூடாது. அவர்களை............" இது பத்திரிகைகளில் பறந்து திரியும் செய்தி. இப்படிப் பல திக்குகளிலும் பல மூலை முடுக்குகளிலும் வேலாயுதத்தின் பெயரே அடிபட்டுக் கொண்டிருந்தது இப்போதெல்லாம் சாதாரண வேலாயுதமென்றால் விளங்காது. 'சமூகத் தொண்டன் வேலாயுதம்' என்றால்தான் விளங்கும். அவ்வளவுக்கு உலகம் அவனை மதித்து போற்றிப் புகழ்ந்தாதரித்து வந்தது.

* * *

வாலிபனாயிருந்தும் அன்று அந்த மாதர்கள் மன்றத்தார் அவர்களின் ஆண்டு விழாவுக்கு இவனை ஓர் முக்கிய பேச்சாளனாக அழைத்ததிலிருந்து இவனிடம் ஆண் பெண் இரு சமூகத்தாரும் எவ்வளவு மதிப்புக் கொடுத்து வந்தார்களென்பது விளங்குகிறதல்லவா? அம்மன்றத்தாரின் அழைப்பை யேற்று அங்கு நடந்த விழாவில் பங்குபற்றி, அன்று அவன் ஆற்றிய 'அன்னையும் பிதாவும்' என்ற சொற்பொழிவு அங்கிருந்த அனைவரையும் ஆட்டிவிட்டது. இவ்விழாக் கொண்டாட்டமெல்லாம் முடிந்து இரவு ஒன்பது மணியளவில் வீட்டுக்குத் திரும்பிய வேலாயுதம் வழக்கமாகத் தான் சாப்பிடும் ஹோட்டலில் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டுவந்து தான் குடியிருக்கும் வீட்டு மண்டபத்துக்குள்ளிருந்த சோபாவில் படுத்துக் கிடந்தவன் அப்படியே அயர்ந்து தூங்கி விட்டான். அப்படி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த வேலாயுதத்துக்கு அந்தச் சாமம் பனிரெண்டு மணி,க்கு மண்டபக் கதவைத் தட்டியது, வீடு இடிந்து விழுவதுபோல் ஓர் பிரேமை தட்டித் திடுக்கிட்டெழும்பிய அவன் செவிகளுக்குள் கதவு தட்டிய சத்தத்தோடு கலந்து புகுந்த 'மிஸ்டர் வேலாயுதம்' என்ற அழைப்பொலி. இவனுக்கோர் திகைப்பையுண்டாக்கியது. 'யாரது' என்று கேட்க அவன் மனம் எண்ணினும் தொண்டை ஒத்துழைக்க மறுத்துவிட்டது மௌனமாக இன்னுமோர்தரம் அச்சத்தங்கேட்கிறதாவென்று கையில் டோச்லைற்றையும் பிச்சுவாக் கத்தியையும் எடுத்துக் கவனித்துக் கொண்டிருந்தான். திரும்பவும் 'மிஸ்டர் வேலாயுதம் சற்றுக் கதவைத் திறவுங்கள்' என்ற சத்தத்தை ஊகித்துக் கொண்டு மெள்ளக் கதவைத் திறந்து டோச்லைற்றின் வெளிச்சத்தைக் காட்டிக் கொண்டே "ரஜனி, என்ன! இந்த நேரத்தில் ஏன் வந்தாய் வா உள்ளே" என்று கூறி அங்குவந்து நின்ற அவன் காதலி ரஜனியை மண்டபத்துக்குள் அழைத்து ஒரு நாற்காலியைக் காட்டி உட்காரச் சொன்னான். ரஜனி வந்ததும் வராததுமாகவே விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டாள். இவள் அழுகையைக் கண்ட வேலாயுதம் அவளருகில்போய் உட்கார்ந்து கொண்டே 'ரஜனி என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்?' என்று பரிவோடு கேட்டான். அதற்கவள் 'அழாமல் என்ன செய்வது! அனாதையைப்போல் துரத்திவிடப்பட்டால்?' என்று கூறியதைக கேட்டதும் வேலாயுதம் திகிலடைந்து 'என்ன அனாதையாகத் துரத்திவிடப்பட்டாயா! யார் துரத்தினார்கள்!! உனது அம்மாவும் அப்பாவுமா? ஏன் துரத்தினார்கள்?' என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

'துரத்தாமல் என்ன செய்வார்கள்! கரும்பைக் களவெடுத்தால் மறைக்கலாம்; கற்பைக் களவெடுத்தால் மறைக்க முடியுமா? அவர்கள் நான் கர்ப்பவதியாய் இருப்பதை அறிந்துவிட்டார்கள்' என்று அவள் கூறியதைக் கேட்ட வேலாயுதத்துக்குப் பொத்துக் கொண்டுவந்த கோபத்தில் "சீ நாயே வாயை மூடு: கற்பைக் களவெடுத்ததும் கருப்பவதியானதும் யாரிடத்தில் இந்தப் பாச்சா காட்டுகிறாய்?' என்று கடிந்து கூறினான். இந்த வசனத்தைச் சிறிதும் எதிர்பாராத ரஜனிகு ஆச்சரியமும், ஆத்திரமும், கோபமும் ஒன்றாகத் திரண்டு கிளம்பி வந்ததில் வியப்பில்லையல்லவா?

அவன் வார்த்தையால் தனக்கு கிளம்பிய ஆத்திரத்தால் உந்தப்பட்டு அவள் தான் இருந்த நாற்காலியை விட்டெழுந்து 'அன்பரே நான் உமது மேடைப் பிரசங்கத்திலும், பத்திரிகைகளில் பறைசாற்றிய எழுத்துக்களின் பசப்பிலும், வேஷப் போர்வையிலும், நல்லவனைப்போல் நடித்த நயவஞ்சகத்திலும் ஏமாந்துபோனேன். என் இதயம் இருளற்றது; என் கற்புக் கழங்கமற்றது; என் காதல் கயமையற்றது இவ்வளவையும் துணைகொண்டு நானும்மை மனங்குளிர நேசித்தேன்: நீரும் என்னை உண்மையாகவே நேசிக்கிறீரென்று நிச்சயமாக நம்பினேன். நீர் என் இதயத்தமர்ந்த இன்ப நாயகனென்று இறுமாந்தேன்; நீர் எனது உண்மையான காதலன் என்று நினைத்துக களிப்படைந்தேன்; நீர் ஓர் உண்மையான சமூகத் தொண்டனென்று நம்பினேன்; உமது உறுதி உருக்குலையாது என்று நம்பினேன்; உமது பேச்சு உத்தமமானது என்று நம்பினேன; உமது காதல் கீதம் உணர்ச்சியின் எல்லையென்று நம்பினேன் என்னைக் கைவிட மாட்டீரென்று நினைந்து நம்பினேன்: ஆனால் இன்று அன்னை தந்தையையிழந்தேன்; அறிவெனும் பொக்கிஷத்தையிழந்தேன்; அளவிடற்கரிய என் கற்பையிழந்தேன்; ஆருயிர்க்கும் மேலான என் குல மானத்தையிழந்தேன்; நானினி ஓர் வெறும் பிண்டம்; மனிதசமூகத் துரோகி பெண் இனத்தின் பேய்; சற்று இன்னும் ஆத்திரம் பொங்கி............நீர் தன் மானத் தமிழர் குலத்தில் பிறந்தும் என்னைத் தன்னைத் தன்மையோடு வாழ முடியாமற் செய்த தப்பிலி; என் கற்பைக் களவெடுத்த காதகன்; பகுத்தறிவாளனென்று பகல் வேஷம்போடும் பாதகன்; பெண்மைக்குத் துரோகஞ் செய்த பேடி......" என்று அழுது கொண்டே கர்ஜித்த ரஜனியின் சொல்லம்புகள் வேலாயுதத்தின் இதயத்தை ஊடுருவிப் பாய்ந்த அடுத்த நிமிஷமே அவன் கையிலிருந்த பிச்சுவாக் கத்தி ரஜனியின் அழகிய மார்பை ஊடுருவிற்று. அவ்வளவுதான். "ஆ...............! பாதகா!! என்னைக் குத்தி...........!" என்று சத்தமிட்டுக் கொண்டே விழுந்தாள் அதற்கிடையில் வேலாயுதம் அவள் வாய்க்குள் தனது அருகில் நாற்காலியில் கிடந்த சால்வையைத் திணித்து கழுத்தை நெரித்துப் பிடிததுக் கொண்டான். சிறிது நேரத்தள் ரஜனியின் உயிரற்ற உடல் அந்த இரத்த வெள்ளத்தில் மிதந்தது. அவள் இறந்து போய்விட்டாளென்று அறிந்து கொண்ட உடனே பிரேதத்தை ஓர் பாய்க்குள் வைத்து பத்திரமாகச் சுருட்டிக்கட்டி சாக்கொன்றுக்குள் போட்டுத் திரும்பவும் சாக்கையும் சுற்றிக் கட்டி பெரிய பூட்டுப் போட்டு மூடியிருந்த ஓர் சிறு அறைக்குள் அடுக்கி. வைக்கப்பட்டிருந்த மூடைகளோடு அடுக்கிப் பூட்டிவிட்டு, விடிவதற்குள் மண்டபத்தையும் அன்னும் இரத்தம் படுக் கிடந்த நாற்காலிகளையும் கழுவிப் போட்டு தனது உடைகளையும் கழற்றி அவைகளுக்குள் அந்தப் பிச்சுவாக் கத்தியையும் சுற்றிக கொல்லையில் புதைததுவிட்டு வந்து பழைபபடிசோபாவி.லயே சிந்தனையை ஓட்டிக்கொண்டு இருந்ததால் தூக்கம் வராமல் படுத்துக கொண்டிருந்த வேலாயுதத்துக்கு மனம் நிம்மதியிழந்துவிட்டது. உடலெல்லாம் உதறித் துடித்தது, உள்ளத்தில் திடீர் திடீரென று சம்மட்டி கொண்டடிப்பது போனற ஓர் அதிர்ச்சி தனது கண்களையே தனக்கு நம்ப முடியாத அளவுக்கு அவன் கண்கள் அனேக இறந்த உருவங்களையும், மெலிந்த கூட்டெலும்பு மனிதர்களையும் கொண்டு வந்து நிறுத்தின. பல விதத்தாலும் குழம்பிக் கொண்டிருந்த இவன் "எப்படியாவது பிரேதத்தை ஆற்றில் போட்டுவிட்டால் இக்குழப்பமெல்லாம் சரியாகிவிடும்" என்று நினைத்துக் கொண்டெ அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தான். பொழுதும் விடிந்துவிட்டது. கிணற்றடிக்குச்

[15-ம் பக்கம் பார்க்க]



## வாழ்க்கை

ஆசிரியர்: சித்தார்த்தன் கிடைக்குமிடம்: மோகன் குமார் அன் கோ, 66/1/5 முதலாம் குறுக்குத்தெரு கொழும்பு விலை சதம் 50.

நடன அழகி பத்மினியின் கவர்ச்சிகரமானதோற்றத்தோடு துலங்கும் மூவர்ண அட்டை சகிதம் வாழ்க்கையின் ஐந்தாவது இதழ் வெளிவந்திருக்கிறது. தமிழ்நாட்டுக்கு அறிமுகமான எஸ் ஆறுமுகம், வாணிதாசன், ஜெகப்பிரியன் ஆகியவர்களோடு பி. வி. ஆர் சாளுக்கியன், அழகுவேலன் முதலியவர்களுடைய சிறு கதைகள் தொடர்கதைகள் கட்டுரைகள் கவிதைகள் இடம் பெற்றுள்ளன ஆசிரியர் சித்தார்தத்ன் எழுதும் மர்மம்கலந்த தொடர் கதை "மஞ்சள் மாளிகை" இந்த இதழில் ஆரம்பமாகிறது. கதை படிக்க ஆசைப்படுவோருக்கு வாழ்க்கை ஏற்ற விருந்து.

## சர்மதமா?

(சிறுகதைகள்)

ஆசிரியர்: வி நூர்முகம்மது கிடைக்குமிடம்: அறிவு மலர்ப் பதிப்பகம கோவிந்தகுடி (P.O) கும்பகோணம் விலை ரூ 1-00

தமிழக முஸ்லிம்களின் வாழ்வைப் பின்னணியாக வைத்து நடந்த உண்மைச் சம்பவங்களோ என்று சந்தேகிக்கும்விதத்தில் எழுதப்பட்ட எட்டு சிறுகதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் இஸ்லாமிய மதக் கருத்துக்களையும் போதனைகளையும் பல இடங்களில் மிக நாஸூக்காக புகுத்தியிருக்கிறார். 'நடக்க முடியாத கற்பனைகளாக கதைகள் இருப்பது கூடாது என்பது ஒவ்வொரு கதைகளிலும் மறைந்து கிடந்து இடையிடையே தலைகாட்டுகின்றன. 'மறுமலர்ச்சி' என்னும் கதை மதம்மாறிய ஒருவனை வைத்து எழுதப்பட்ட பிரசாரக் கதை [illegible] கிடைக்கப்பெற்றோம்:

## மறுமலர்ச்சி

ஆசிரியர்: 'பாஷா' கிடைக்குமிடம்: பலக்கரை திருச்சி விலை அணா 2½

## மாணவர் முரசு

ஆசிரியர்: எஸ் ஏ. ஜே கிடைக்குமிடம்: 76 ஸ்டேஜ் ரோட், கொழும்பு - 14. விலை சதம் 5

மாணவர் பத்திரிகையாக இருந்தும் நல்ல அம்சங்களுடன் மிளிர்கிறது. பத்திரிகையின் அமைப்பும் அச்சும் எடுப்பாயிருக்கின்றன. மாணவ உலகம் நிச்சயம் ஆதரவு அளிக்குமாக

—எஸ் ஆர்.

கவனிக்க:

மதிப்புரைக்கு புஸ்தகம் பத்திரிகை அனுப்புவோர் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும். ஒரு பிரதி அனுப்பும் எந்தப் பத்திரிகைக்கும புஸ்தகத்திற்கும் விமர்சனம் செய்யப்படமாட்டாது.

—ஆசிரியர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1952ம் வருட பிரதமர் பந்தயம்:

# விசாரணை செய்ய மறுப்பதின் மர்மம்

## ஆசிரியரை அம்பலப்படுத்த அஞ்சுவதேன்?

பாராளுமன்றத்திலே பிரதம மந்திரி ஒரேயடியாக கை விரித்துவிட்டார் திரு கெனமனின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் "1952ம் வருட பிரதமர் பந்தயம்" என்ற பிரசுரத்தைப்பற்றி விசாரிக்க முடியாது என்று பிரதமர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அவருடைய அரசாங்கத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்தெறிவதற்கு அடிகோலிய அது ஒரு "சாதாரண" பிரசுரம் என்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

இப்பிரசுரம் இந்நாட்டில் மட்டுமின்றி உலக நாடுகளின் கவனத்தையும் கவர்ந்த ஒரு சர்வதேசிய தஸ்தாவேஜு என்பதில் ஐயமல்லை. இதன் மகாத்மியங்களில் சில:-

இது உள்நாட்டிலே ஒரு பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டது. ஒட்டாவாவுக்குச் சென்ற மந்திரி சேர் ஜோனை சென்ற காரியத்தையும் இடையில் கைவிட்டு ஓடோடியும் வரும்படி செய்தது மந்திரிசபை கவிழ்ந்துபோகும் நிலைமையைச் சிருஷ்டித்தது மந்திரிகள் பதவிப் பித்தர்களென்பதை மக்கள் முன்னால் எடுத்துக்காட்டியது. பாராளுமன்ற யு என் பி. பிரதிநிதிகளை இருகூறுகப் பிரித்து யு. என். பி அரசாங்கத்தையே அழித்துவிட அடிகோலியது. யு. என். பி. ஸ்தாபனத்தில் ஒரு பிரமாண்டமான பிளவை உண்டாக்கப் பாதை செப்பனிட்டது. சேர் ஜோன் வந்திறங்கியதும் புரட்சி பொங்கும் என்ற பீதியில் யு என் பீ. வாலிபர் சங்கக் காரியாலயத்தை ஆயுதம்தாங்கிய போலீஸ் காவல் காத்து நிற்க வேண்டிய நிலைமையை உண்டாக்கியது "விரியன் பாம்பு", "கோஞ்சான்", "மாமியாரை விற்பவன்" என்றெல்லாம் மந்திரிகளில் சிலருக்கு நாமகரணம் சூட்டி, அவர்களின் மானத்தைக் கப்பலேற்றியது. பிரதம மந்திரி பதவியைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்றதாகக் கூறப்படும் பயங்கரமான சதிகளை அம்பலட்படுத்தியது. சுருங்கக்கூறின் அந்தப் பிரசுரம் ஒரு பெரிய அரசியல்நெருக்கடியைச் சிருஷ்டித்து நாட்டு மக்களிடையே பரபரப்பையும் ஏற்படுத்தியது. ஆகவே இது ஒரு சாதாரண அலட்சியப்செய்யக்கூடிய பிரசுரமல்ல என்பது அனைவருக்கும் தெரியும்.

தேசீய, சர்வதேசீய முக்கியத்துவம்வாய்ந்த இத்தகைய ஒரு தஸ்தாவேஜில் அடங்கியிருக்கும் விஷயங்கள் உண்மையானவைதானு அல்லது முழுவதும் ஜோடிக்கப்பட்ட தகவல்களா அதை எழுதிய ஆசிரியர் யார் போன்றவிஷயங்களை விசாரித்தறிய பிரதமர் ஒரேயடியாக மறுத்துவிட்டது பல சந்தேகங்களைக் கிளப்பிவிட்டிருக்கிறது. அவைகளிற் சில:

1. ஆசிரியர் பெயர் வெளிவந்துவிடாமல் அவரைப் பாதுகாக்கப் பிரதமர்விரும்புகிருரா?

2. அதில் கண்ட விஷயங்களில் சில உண்மையென நிரூபணமாகிவிட்டால், தனது நிலைமை எக்கசக்கமாகிவிடுமென்று பிரதமர் அஞ்சுகிருரா?

3. மந்திரி சேர் ஜோனின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்படுமென்று பிரதமர் கருதுகிருரா?

4. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல, இதை விசாரிக்கப்போய், வேறு சில இரகசிய விஷயங்களும் பகிரங்கமாகிவிடுமென்ற அச்சமா?

இதுபோன்ற இன்னும் எத்தனையோ சந்தேகங்கள் ஏற்படுவது இயற்கையே. இவ்வாறு இந்தப் பிரசுரத்தின் ஆசிரியரைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பிரதமருக்கு ஏன் ஏற்பட்டிருக்கிறதென்பதற்கு பொதுமக்களிடம் அவர் பதில் கூறியாக வேண்டும்.

இவ்விஷயத்தைப்பற்றி திரு பீட்டர் கெனமன் பாராளுமன்றத்தில் பேசும்போது டாக்டர் என். எம் பெரேரா "புதும சத்து" என்று ஒருபொதுக்கூட்டத்தில் கூறியதை விசாரணை செய்வதற்காக ஒரு விசாரணைக் கமிட்டி நியமனம் செய்யப்பட்டதைக் குறிப்பிட்டுவிட்டு, எதிர்க்கட்சியினர் பொதுமேடையில் பேசுவதை ஒரு வார்த்தை கூடவிடாமல் ஒலிப்பதிவு செய்யும் போலீஸாருக்கு இதை மட்டும் ஏன் விசாரணை செய்ய முடியாது

[14-ம் பக்கம் பார்க்க]

## அரசாங்க மரியாதையிலும் பாரபட்சமா?

சேர் ஏ. எம். மொலமூரே, சேர் ஜெரால்ட் விஜயகோன் ஆகிய இருவரும் சபாநாயகர்களே இருவருக்கும் சரிசமமான பொறுப்புகள் இருந்தன. அப்படியிருந்தும் மொலமூரேக்கு மட்டும் ராஜாங்க மரியாதைகளுடன் மரணச் சடங்கு நடத்தவும், விஜயகோனுக்கு அத்தகைய மரியாதைகளை அளிக்காதிருக்கவும் காரணமென்ன?


பாராளுமன்றத்தின் சபாநாயகர் சேர் ஏ. எப். மொலமூரே காலஞ்சென்றபோது அவருக்கு ராஜாங்க மரியாதைகளுடன் மரணச் சடங்கு நடத்திவைக்கப்பட்டது. ஆனால் இருமுறை செனட் சபைத் தலைவராகவிருந்து காலஞ்சென்ற சேர் ஜெரால்ட் விஜயகோனுக்கு மரணச் சடங்கின்போது எத்தகைய ராஜாங்க மரியாதையும் அளிக்கப்படவில்லை— பொது மக்கள் தங்களின் துக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படவுமில்லை.

யு. என் பி கண்ணேட்டத்தில் இருவரும் மாப்பெரும் தேசபக்தர்களே விஜயகோன் மொலமூரேயை விட முதிர்ந்த ராஜீயவாதி என்பதில் சந்தேகமில்லை. இந்நிலையில் மொலமூரேக்கு ஆடம்பரமான அரசாங்க மரியாதைகள் எல்லாம் நடைபெற்றன. ஆயினும் பாவம்! விஜயகோனுக்கோ அனாதைப் பிரேதத்திற்கு கிடைக்கும் மரியாதைகள்தான் கிடைத்தன. அவர் விஷயத்தில் மட்டும் அரசாங்கம் இவ்வாறு பாரபட்சம் காட்டக் காரணமென்ன? ராஜாங்க மரியாதை என்ற பெயரால் பொதுமக்களின் பணத்தை விரயமாக்குகின்ற யு என். பி. ஆட்சியினர் சேர் விஜயகோனின் பிரேதத்தைமட்டும் பரிதாபகரமானமுறையில் ஏன் கைவிட்டுவிடவேண்டும்?

சேனநாயகா-கொத்தலாவலக் குடும்பத்தைச் சேர்ந்தவராகமட்டும் [illegible] விஜயகோன் இருந்திருந்தால் அவருக்கு அரசாங்க மரியாதைகள் அமோகமாகக் கிடைத்திருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அவர் அக்குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல எனவே அவர் அரசாங்க மரியாதைகளைப் பெற உரிமையற்றவராகிவிட்டார்போலும்!

ராஜாங்க மரியாதைகளுடன் மரணச் சடங்கு நடத்துவது என்பதை இந் நாட்டில் யு. என். பிதான் ஆரம்பித்து வைத்தது. அதன் மூலம் யு. என். பி தலைவர்கள் இறந்த பிறகாவது சுலபமாகத் "தேசியத் தலைவர்களாக்கப்"படுகிருர்கள். ஆதலால் சேர் விஜயகோனுக்கு ராஜாங்க மரியாதைகள் கிடைக்கவில்லையே என்ற கவலை பொதுமக்களுக்குக் கிடையாது ஆயினும் சபாநாயகர்கள் இருவரில் ஒருவருக்கு மரியாதை அளிக்கவும் மற்றவருக்கு அந்த மரியாதையை அளிக்காதிருக்கவும் காரணம் [illegible] கொள்ள மக்கள் விரும்புகின்றனர்.


## மூல வியாதிக்கு



### ரிஷி லேகியம்

(ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்)

தேகசூடு, நாள்பட்ட துர் வியாதிகள், அசதி, சோம்பல், மேல், கை, கால் கண் எரிச்சல், காந்தல், வலிகள், வயிற்றுப் பொருமல், வாய்ப் புண், வயிற்றுவலி பித்த வாய்வு, நெஞ்சடைப்பு, அஜீரணம், கை கால் வீக்கம், சொறி சிரங்கு, வாதக் கடுப்பு, தேக மெலிவு, உள் மூலம், வெளிமூலம், இரத்தமூலம், சீள்மூலம், ஆசனவாயில் ஏற்படும் எரிச்சல், அரிப்பு, தினவு, குத்து வலி, கடுப்பு, கிருமி உபத்திரவம், அடி தள்ளுதல், மூல குட்டினல் உண்டாகும் எல்லா உபத்திரவங்களுக்கும் கைகண்டது.

30 நாள் மருந்து ரூ. 5/50
15 ,, ,, ரூ. 3/-

தபால் செலவு -/85

ஞானசுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு.



பாலைவனப் பிரயாணத்திற்கு ஒட்டகம் எப்படி உபயோகமாகிறதோ அப்படி உங்களை அடைமழையிலும், அகோர வெயிலிலும் இருந்து காப்பாற்றுகிறது

## ஒட்டக மார்க் குடைகள்

அசல் இங்கிலீஷ் மேக் குடைகள்




ரெஜிஸ்டர் நம் 12336

★ குறைந்த விலை
★ உயர்ந்த குடை
★ ஒட்டக மார்க் குடை ஒன்றுதான்.

இப்போது இலங்கையில் அதிகமாக விற்பனையாகிறது.

வியாபாரிகளுக்கு விலையில் விசேஷ சலுகைகள் உண்டு

எங்களிடம் புதிதாய் இறக்குமதி செய்யப்பட்ட பார்க்கர் ஜூனியர் பேனுக்களும் கிடைக்கும்

தீபாவளிக்கு வேண்டிய உங்கள் ஜவுளிகளுக்கு எங்கள் மாளிகைக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

விபரத்திற்கு எழுதவும் அன்றேல் நேரில் விஜயம் செய்யவும்

ஐக்கியா டிரூப்பரிஸ்டோர்ஸ்
6, சைனு வீதி, கொழும்பு-11.
போன்: 5113


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்திய திரை நட்சத்திரம்:

# அஷோக் குமார்

சமீபத்தில் சைக்கிள் நிபுணர்கள் எல்லோருமே ஆச்சரியப்படும்படியான அந்தச் சம்பவம் இந்தியாவுக்கே பெருமைதரக்கூடியதாக இருந்தது ஆனல் அந்தச் சம்பவத்தின் காரணகர்த்தாவுக்கு கால் எலும்பு முறிந்துவிட்டது. அளவுக்கு அதிகமான வேகத்தில் சைக்கிள் சென்றதால் சைக்கிளின் பின் சக்கரக் 'குடம்' உஷ்ணமடைந்து உருகிவிட்டது. சவாரிசெய்தவரின் கதியைப்பற்றிக் கேட்கவேண்டுமா? இடது கால் எலும்பே முறிந்துவிட்டது. இவ்வளவு பெரிய சாதனை ஒரு சினிமா நடிகர் செய்தார் என்றால் ஆச்சரியப்படுவீர்கள். சினிமா நக்ஷத்திரங்கள் என்றாலே கோழைகள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் நடிகர் அஷோக்குமாரின் இந்த சைக்கிள் சவாரியைக் கண்டாவது தங்கள் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஹெல்சிங்கியில் நடக்க விருக்கும் உலக ஒலிம்பிக் போட்டியில் தாம் சைக்கிள் போட்டியில் கலந்துகொள்ளப்போவதாக அஷோக் தெரிவித்தார் அதைத் தொடர்ந்து பலதடவை போட்டியில் கலந்துகொள்ளப் பழகிக்கொண்டார். இப்படி ஒருநாள் பழகிக்கொண்டிருக்கும்போது தான் மேற்கண்ட சம்பவம் நடந்தது. சாதாரண பழக்கமே இப்படியென்றால் அஷோக் போட்டியில் கலந்திருந்தால் வெற்றி அவருக்குத்தான். அதுதான் முடியாமற்போய்விட்டதே!

வடஇந்திய நட்சத்திரங்கள் எல்லோரையும்விட கைநிறையச் சம்பாதிப்பவர் அஷோக் குமார் தான் ஆனல் ஒரு படத்துக்கு இவர் பெறும் பணம் திலிப் குமாரைவிடக் குறைவுதான். இளமை குன்றாத கண்சொட்டும் முகமும் சுருண்டு சுருண்டு நெற்றியில் வந்து வீழும் கேசமும் அஷோக்குமாருக்குத் தனி அழகைக் கொடுக்கிறது. 16 வருடங்களுக்கு முன் தேவிகாராணியுடன் நடித்த அஷோக் இப்போது 18 வயது நிரம்பியுள்ள மதுபாலாவுடன் கதாநாயகனாக நடிக்கிறார். இதற்குக் காரணம் அவரது இளமைமாரு முகமும் உடற்கட்டும்தான் இப்போது தேவிகாராணி தாய் பாகத்தைக் கூடத் தாங்கி நடிக்கக்கூடத் தகுதியற்றவராகிவிட்டார்! வங்காளிக் குடும்பத்தைச் சேர்ந்த அஷோக்குமார் 1911ம் வருடம் பிறந்தார் அவரது தந்தை ஸ்ரீ குழத்லால் குஞ்சிலால் கங்குலி ஒரு வக்கீல் தனது நட்சத்திரக் குமாரனை பி. ஏ வரை நாகபுரி யுனிவர்ஸிடியில் படிக்க வைத்தார் பின்னர் தன்னைப் போல் தன் மகனும் வக்கீலாக வேண்டுமென்ற தன் விருப்பத்தை குழத்லால் வெளியிட்டார். அஷோக் குமாரோ தந்தையின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை மேல்நாடுகளுக்குச் சென்று 'போட்டோகிராபி' சம்பந்தமாகப் படிக்க விரும்பினர் அஷோக்குமாரின் மைத்துனர் ஷைதர் முக்கர்ஜிக்கு அஷோக் வெளிநாட்டுக்குச் சென்று தொழில் பயிலு



அஷோக்குமார்

வது பிடிக்கவில்லை முகர்ஜீ அப்போது பாம்பே டாக்கீஸில் வேலைபார்த்து வந்ததால் அஷோக்கை பம்பாய்க்கு அழைத்து தம் முதலாளி ஸ்ரீ ஹிமன்ஸு ராய்க்கு அறிமுகம் செய்து வைத்து ஒரு வேலையையும் வாங்கிக் கொடுத்துவிட்டார். அஷோககுமார்லாபரட்டரி பகுதியில் பணிபுரிந்து வந்தார் அவருக்கு சினிமாவில் நடிக்கவேண்டுமென்று உள்ளூரக் கொள்ளை ஆசை தான. ஆனல் வெளியே சொல்ல வெட்கப்பட்டார்.

> அடுத்த இதழில்
>
> ஆந்திர நட்சத்திரம்
>
> ஏ. நாகேஸ்வரராவின்
>
> வாழ்க்கை வரலாறு
>
> வெளிவரும்.

சிலசமயங்களில் அவர் தாம நடித்தால் எப்படியிருக்கும் என்று சிந்திப்பார். அந்த க்ஷணமே நடிப்பு யோசனையைக் கைவிட்டு கழுவிவிடுவார் நடிக்க வேண்டுமென்ற ஆசை மறையவில்லை. அஷோக்கின் மறைமுக ஆசை ஹிமன்ஸு ராய்க்குத் தெரியாவிட்டாலும் அவர் அஷோக்கை எப்படியாவது சினிமாவில் சேர்த்துவிட வேண்டுமென்று விரும்பினர் அஷோக்கின் அழகுதான் இதற்குக் காரணம். தமது நக்ஷத்திர மனைவி தேவிகாராணியின் "ஜீவன்னய்யா" வில் அஷோக்கை நடிக்கச் செய்தார். "ஜீவன்னய்யா"





அஷோக்குமாருக்குப் புது வாழ்வளித்தது அடுத்தபடியாக 'அச்சுத்கன்யா' வில் நடித்தார். இதிலும் பிரமாத வெற்றி அதன் பிறகு பாம்பே டாக்கீஸாரின் "இஜ்ஜத்", "சாவித்திரி", "நிர்மலா", "பந்தன்" "வச்சன்", "ஜாவர்", "கங்கன்", "கிஸ்மத்" ஆகிய படங்களில் தேவிகாராணி லீலாசிட்னிஸ் ஆகியோருடன் நடித்திருக்கிறார்.

பாம்பே டாக்கீஸாரின் ஒப்பந்தம் முடிந்ததும் அஷோக்குமார் பிலிம்ஸ்தானில் சேர்ந்து "சல்சல் ரே நவ்ஜவான்', "ஷிகாரி", "எட்டு நாட்கள்' "ஸமாதி" ஆகிய படங்களில் நடித்து நக்ஷத்திரப் பதவியை எட்டிப் பிடித்தார்.

மேற்கண்ட படங்கள் அத்தனையும் அஷோக்குமாருக்கு நல்ல பெயரைத்தான் தேடித் தந்தன ஆனல் "மஹால்" "கிஸ்மத்" "ஸங்க்ராம்" "திதார்" ஆகிய படங்கள் அஷோக்குமாருக்கு அழியாப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டன எந்தப் படத்தை மறந்துவிட்டாலும் "கிஸ்மத்தையும்" 'ஸங்க்ரமையும்" விசிறிகளால் என்றுமே மறக்க முடியாது.

5 அடி 8 அங்குல உயரமுள்ள அஷோக் தமது மனைவி சோபனாவுடனும் தமது மூன்று குழந்தைகளுடனும் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கிறார்.

பானுமதியுடன் "ஷம்ஷீர்'லும் பினாராயுடன் "ஷோலி'யிலும் நளினி ஜெய்வந்துடனும் "நாஸி' லும் தற்பொழுது நடித்து வருகிறார்.

உயிர்வாழ மனிதனுக்கு அவசியமானது எது? உணவு.

KAMALA APPALAM

அந்த உணவை ருசிப்படுத்துவது எது? அதுவே

கமலா பப்படம்

(ரிஜிஸ்டர்ட் நிர் 13207)

ஒருமுறை பாவித்துப்பார்த்தால் உண்மையை உணருவீர்கள்

முதல்ரக உளுந்தால் சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்பட்டது குணம், மணம், ருசி நிறைந்தது.

இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கும்

Proprietor: பி. எம். ஹமீது,

197, கெய்ஸர் வீதி, கொழும்பு

ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாசம்
பீடியிற் சிறந்தது கமலா பீடியே

★

கமலா, லீலா பீடிகளும் பீடிக்குத் தேவையான நாகப்பூர், சிங்கறணி இலைகளும், ஆக்கூழ் நிந்பாணிபுகை யிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. அவசியம் கவனிக்கபபடும்.

கமலா ஸ்டோர்ஸ்

Proprietor: S. V. பொன்னம்பலம்

15, செட்டியார் தெரு, கொழும்பு.

போன்: 3597 தந்தி: தாமரை

## வேல் தைலம்

இதனல் குணமாகும் வியாதிகள்:– ஜலதோஷம், மூக்கடைப்பு, தலைவலி தலைப்பாரம், ஒருதலைக்குத்து, பிடரிக்கனம், கைகால் உளைச்சல், முதுகுவலி வயிற்றுவலி, விஷக்கடி, தேள்கடி, பூரான்கடி, எலிக்கடி ஜன்னி 13, வாதம் 80 வாய்வுகுத்து, வாய்வு பிடிப்புகள், விதைவாய்வு, நரம்புவலி, பல்வலி, பல் அரணை இழுப்பு, கச்குவான், இருமல், காதுகுத்து காதுவலி சுளுக்கு வீக்கம், ரத்தக்கட்டு, வெட்டுக்காயம், புண் சொறி, சிரங்கு, கட்டிகள். புறப்பாடுகள் முதலிய சகல வலிகளுக்கும், வியாதிகளுக்கும் அந்தந்த இடங்களில் வேல் தைலத்தை நன்றாய்த் தேய்த்துவர ஆச்சரியமான குணம் கொடுக்கும். இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய மகாசஞ்சீவி ஒவ்வொரு புட்டியிலும் உபயோக விபரம் வைக்கப்பட்டிருக்கின்றது.

புட்டி 1 ரூ. 1-25. டஜன் 1 ரூ. 12-00
வி. பி. பி. தபால் செலவு வேறு

## லக்சால்

இது நாள்பட்ட சொறி, சிரங்கு, முகப்பரு, நமைச்சல், கக்கூஸ்பற்று, படை, தேமல், வண்டுகடி தண்ணீர்கடி, பித்தவெடிப்பு, ரணங்கள், புண்கள், காயம், வேனல்கட்டி, கரப்பன், தழுவணி, அக்கி தீச்சுட்ட புண்கள் முதலிய சகல சர்ம வியாதிகளையும் குணமாக்கும் இது தோலிலுள்ள விஷக் கிருமிகளை சிலநிமிஷங்களில் அழித்து பூரணசுகத்தைக்கொடுத்து சர்மத்திற்கு பளபளப்பை உண்டாக்குகிறது. துணிகளில் கறைபிடிக்காது.

புட்டி 1 சதம் 75 டஜன் 1 ரூ. 7-00
வி. பி. பி. தபால் செலவு வேறு.

## கோபால் பல் பொடி

பல்களுக்கு வெண்மைதந்து பிரகாசிக்கச் செய்யும் பல்வலி, பல் அரணை, பல்கூச்சம், ஈறுகளில் இரத்தம்வருதல் முதலியவைகளை நீக்கி பல்களுக்கு தீர்க்காயுள் தரும். வாய்க்கு ருசியும், முகத்துக்கு அழகையும் உண்டாக்குகிறது. 100 பாக்கெட்டுகள் விலை ரூ 7-50 வி பி பி. தபால் செலவு வேறு. இம்மருந்துகள் எல்லா இடங்களிலும் விற்கப்படுகிறது. உங்களுக்கு சமீபத்தில் உள்ள கடைகளில் கேட்டு வாங்குங்கள். அல்லது எமது இலங்கை சோல் ஏஜண்டுக்கு எழுதி பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பவர்கள்:
எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ.
வேல் கெமிககல் வர்க்ஸ், 280, கீழ மாசிவீதி, மதுரை

இலங்கை சோல் ஏஜண்ட்:
எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.
34, செட்டியார் தெரு, கொழும்பு-11

ஹெட் ஆபீஸ்:
193, காலிரோட், கொள்ளுப்பிட்டி கொழும்பு-3

TELE { gram: jayaJeevi
phone: 6019.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஜாவுரிமை மனுக்களைப் பரிசீலனை செய்வதில் புதிய அபாயம்

## பைசல் செய்த 16834 மனுக்களில் 12390 தள்ளுபடி

### காங்கிரஸ் மகஜரின் கதி என்ன?

இலங்கை-இந்தியரின் சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டு 19 தினங்களாகின்றன. இன்னும் 41 தினங்களில் அறப்போர் மீண்டும் ஆரம்பமாகிவிடும். சமரசம் காண சாதகமான சூழ்நிலையை சிருஷ்டிப்பதற்காக இரு மாதங்களுக்கு மட்டும் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது வாசகர்களுக்குத் தெரியும்.

காங்கிரஸ் காட்டிய இந்த சமிக்ஞையை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளுமா என்பதுதான் பிரச்னை. போராட்டம் நிறுத்தப்பட்டது பலவீனத்தின் அறிகுறி-இந்தியர்கள் பணிந்துவிட்டார்கள் என்றெல்லாம் கருதி - யு. என். பி. ஆட்சியாளர்கள் காங்கிரஸ் காட்டியநல்லெண்ணத்தை அலட்சியம் செய்வார்களாயின விரிவான முறையில் சத்தியப் போர் ஆரம்பிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இதுவரை அரசாங்கம் எந்த உருப்படியான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. கடந்த ஜுலை மாதத்தில் காங்கிரஸால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது மகஜருக்கு இதுவரை பிரதமர் பதிலளிக்கவில்லை. இலங்கை-இந்தியர்கள் சுலபமாகப் பிரஜா வுரிமை பெறுவதற்காக சட்ட விதிகளைத் திருத்துமாறு பிரஸ்தாப மகஜரில் கோரப்பட்டிருக்கிறது. அது பிரதமர் காரியாலயத்தில் எங்கேயோ ஒரு மூலையில் நிம்மதியாகத் தூங்குகிறது. பிரதம மந்திரி ஓரிரு சில்லறைச் சலுகைகளைக் கொடுத்திருக்கிறார் என்பது உண்மையே. ஆனால் வாசகால யோக்கிய தாம்சத்தை நிரூபித்தல் போன்ற அசாத்தியமான சட்டவிதிகளைத் தளர்த்தா விட்டால் சில்லறைச் சலுகைகளால் காரியப்பயன் ஏற்படப்போவதில்லை.

அவர் சபையத்தில் ஓர் மண்டலம் ஒருவரை ... பேசும்போது இந்நாட்டில் ஜனத்தொகை பெருகிவருவதால் இலங்கை - இந்தியரில் ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கே பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் வழங்குவதென்ற கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்கிறது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டுதான் பிரஜாவுரிமை மனுக்கள் பைசல் செய்யப்படுகிறதா என்பது தெரியவில்லை. அப்படியானால் பெரும்பகுதி மனுக்கள் நிராகரிக்கப்படுமென்பதில் ஐயமில்லை. தொண்டமான்கள், ராஜலிங்கங்களுக்கோ அல்லது வேறு எந்த ஐப்புலிங்கங்களுக்கோ பாராளுமன்றத்தில் இடமளிக்கப்போவதில்லை என்று தேர்தல் சமயத்தில் அவர் ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்தாரே, அந்தக் கொள்கையை அவர் இன்னும் கைவிட்டதாகத் தெரியவில்லை. சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டதன் விளைவாக அவரிடம் மனமாறுதல் ஏதும் ஏற்படவில்லையென்பதையும் ஓர் மண்டலிளப் பிரசங்கம் தெளிவுபடுத்திவிட்டது.

இப்பொழுது பிரஜாவுரிமை மனுக்களைப் பரிசீலனை செய்து பைசல் செய்யும் வேலை துரிதமாக நடைபெறுகிறதாம். இதனால் ஓர் பெரிய ஆபத்து ஏற்படுமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

வாசகால யோக்கியதாம்சங்களை நிரூபிக்கவேண்டும் என்ற கடினமான விதிகளையெல்லாம் தாராளமாக தளர்த்தாமல், மனுக்களைத் துரிதமாகப் பரிசீலனை செய்வதின் ஒரே விளைவு ஏராளமான மனுக்கள் நிராகரிக்கப்படுவதுதான். மனுக்களின் பரிசீலனை துரிதமாக நடைபெறும் ஆனால் பல மனுக்கள் தள்ளுபடி செய்யபடும் ஆபரேஷன் வெற்றியடைந்துவிடும். ஆனால் நோயாளி இறந்துபோவான் என்ற நிலைமைதான் ஏற்படும். ஆகவே விதிகளைத் தளர்த்தாமல் மனுக்களின் பைசலைத் துரிதப்படுத்துவதென்பது ஒரு சாதுரியமான ராஜதந்திரமாகும். இதுவரை பைசல்செய்யப்பட்ட 16834 மனுக்களில் 12390 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அதாவது அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு மனுவுக்கும் சராசரி 3 6 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன.


வாத நோய்களுக்கெல்லாம் ஓரேமருந்து

**சீனடி தைலம்**

உங்கள் தேக வாதை எவ்வகைப்பட்டதானாலும் எவ்வளவு காலம் சென்றதானாலும் ஒருமுறை மருந்தினால் தீர சுகம். பாவக்கும்முறை மருந்துடன். அண்டவாய்வு, ஹெர்ணியா வாய்வு ஆபரேஷனில்லாமல் சுகப்படும்.

பெரிய போத்தல் தபால் செலவுடன் ரூ. 5-50
சிறிய „ „ ரூ. 3-50
ஏஜண்டுகள் தேவை. 20 0/0 கமிஷன்கொடுக்கப்படும்

**ஓ. எல். எப. யூசுப்**
(வாதநோய் நிபுணர்)
327, தெமட்டகொட ரோட், மருதானை.



**முருகன் தியேட்டர் (ஜிந்துப்பிட்டி)**

**உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் காதலோவியம்!**

பொன் கடத்தும் கள்ளன் பெண் கடத்தும் விந்தை!

- டோனி ஓர் மிடுக்கான தங்கத் திருடன். தங்கத்தை மட்டுமல்ல அழகான மேலைக் கடல் மீன்பிடிக்காரியின் இதயத்தையும் திருடிக்கொண்ட பக்காத் திருடன்.
- அழகுத் தோற்றமும், நயனக் கவர்ச்சியும்கொண்ட மான்குட்டி மரியா, தகிக்கும்காதலைச் சகிக்க முடியாமல் திணறுகிறாள். ஓங்கி வளர்ந்த பனைமரங்கள் உச்சியின மேலே நீல வானத்துச் சந்திரன் மரக்கிளைகளினூடே விழும் சந்திரப் பிரகாசம். போதாததற்கு சாதற் கள்வனின் கானக் குரலோசை. இவையெல்லாம் சேர்ந்ததினால் அக்கிராமியப் பெண்ணின் அமைதியான உள்ளம் அலைகடற் குமுறலைப் பிரதிபலித்தது.
- அங்கமெல்லாம் நெக்குநெக்காய் உருகி, அணுவெல்லாம் குததலெடுத்து விட்டில் பூச்சி போலத் துடிக்கிறாள் அப்பருவக் குமரி காதல்நோய் அவளை வாட்டிவருக்கிறது.




அதுதான்

# ஜால்

சனிக்கிழமை: பிற்பகல் 3 மணி
மாலை 6 மணி, இரவு 9-30 மணி

ஞாயிற்றுக்கிழமை: காலை 10மணி
பிற்பகல் 3 மணி, மாலை 6-30,
இரவு 9-30 மணி

தினசரி: மாலை 6-30, இரவு 9-30.




டோனி - மரியா காதல் என்னவாயிற்று? லிசாவின் கதி யாது?
இவற்றை வெள்ளித்திரையில் கண்டு களியுங்கள்.

• கீதாபாலி • தேவ்ஆனந்த் • பூர்ணிமா

முதலிய பிரபல நக்ஷத்திரங்கள் தோன்றுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலங்கையின் இயற்கை வளம்

அன்றைய எனது சுற்றுப் பிரயாணத்தின்போது நான் பாடசாலையிலே படித்த சில பாக்கள் எனது ஞாபகத்திற்குவந்தன. அப்பாக்களைப் பாடி மகிழும் தருணம் அதுவன்றே தோன்றியது. எமது இலங்கையை இரத்தினதுவீபம் என்றுகூட வாய் கூசாது கூறலாம். "கோலமாதவி வன்னி மராமரம் கோங்கு வேங்கை செங்குங்குமம் சாதி ஏலம் ஆர்கதிர் கற்றையை மாற்றிடும்" என்ற புலவரின் விருப்புத்தானென்னே. எமது ஈழம் ஒரு கடலின் மத்தியிலிருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிறது அதன் கரையோரங்களில் செம்படவரின் மாரு ஓசை பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது. கடற்கரையோரங்களில் குவிந்து கிடக்கும் உப்புக் குவியல்களைக் கொண்டு எமதிலங்கையை வெண்துகிலணிந்த மாது என்று சொல்லலாம். அதற்கடுத்தார்போல் மேற்கூறிய பாவைச் சான்று கூறலாம்.

இரத்தினபுரி என்னுமூர் இரத்தினக் குவியல்களைத் தன்னுள்ளடக்கி இருக்கிறது. அவ்விடங்களிலும் அதன் சுவாத்தியமுள்ள இடங்களிலும் பார்த்தால் ஒரே பசுமை நிறம். ஒரு புறம் தேயிலை, ஒரு புறம் ரப்பர் இன்னொருபுறம் நவதானியங்கள். தேயிலை கொய்யப்புகும் பெண்களினதும் ஆண்களினதும் காட்சி இன்னொருபுறம். இடை, இடையே பல குன்றங்கள் நிறைந்து எங்களை ஆனந்திக்கிறது மலைநாடு "மூப்பியலால் முதுமந்தி தாவி மலையிடை பாய இள மந்தி உருவடிவாய் விடும் ஈழ மண்டல நாடெங்கள் நாடே" என்னும் பாவை ஆராய்வோமானால் அது அம்மலைகளின் நெருக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. அம்மலைகளில் தவழ்ந்து செல்லும் கார் மேகக் கூட்டத்தின் காட்சி எங்கள் கண்களைக் கவருகின்றது. அம் மலைகளிலிருந்து சிறிது சிறிதாக விழும் நீர் துளிகள் ஒன்று சேர்ந்து பெரும் பெரும் நீர்வீழ்ச்சிகள் உண்டாகின்றன அதிலிருந்து பல ஆறுகள் மேடு காடு, பள்ளமென்றுபாராமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவ்வாற்றங்கரைகளில் நிறகும் மா, டலா, வாழை, கமுகுக கூட்டங்கள் கணக்கிடமுடியாது. இன்னும் அவ்வாறுகளில் துள்ளகுதித்து விளையாடும் வாளை, வரால் போன்ற மீன்கள் மாத்திரமே எம் நாட்டின் இயற்கை வளப்பை நன்கு எடுத்துக் காட்கின்றன.

ஆ...
அ. க. பாட...
கற்பிட்டி

## முதற் பயிற்சி

மாணவர்களாகிய நாங்கள் எத்தனையோ வகையான தேர்வுகளில் தேறவேண்டியிருக்கின்றது. அவைகளில் ஒன்று ஒழுக்கம். நாங்கள் பெறும் கல்வி அறிவிற்கு ஒழுக்கம் இன்றியமையாதது. ஆனபடியால் எங்கள் மாணவ பருவத்தில் அதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டியது. எங்கள் கடமைகளில் ஒன்று: ஏனெனில் பிற்கால வாழ்க்கை மற்றவர்கள் தெரிந்துகொள்வதற்கு ஏதுவானது இந்த ஒழுக்கம்தான். அதில் அழுக்கு ஏற்பட்டால் அதைத் திருத்த நாம் முயன்று அதைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

இக்காலத்தில் வாலிப வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் அநேக மாணவர்கள் பொருளாதார வேற்றுமையினுல் தவருன பாதையில் போய்த் தங்களுக்கும் சமூகத்திற்கும் ஊறு தேடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அச்சமயத்தில் ஒழுக்கத்திற்கு ஒரு ஒதுக்கமான இடத்தைக் காட்டிவிட்டுத்தாங்கள் தான்தோன்றித்தனமாகப் போய்ச் சிக்கிச் சொண்டு தத்தளிக்கிருர்கள். அவர்களிடம் ஒழுக்கத்தைப் பற்றிச் கேட்டால் அதை "அநாகரீகம்" என்று சொல்லித் தட்டிக் கழித்துவிடுகிருர்கள். தப்பித் தவறி ஆசிரியர்கள் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருதி அவர்களைத் திருத்த முயன்ருராஞல் அவர்களின் முதுகுக்கு எண்ணெய் போடவேண்டிய நிலையும் ஏற்படலாம். இதை முன்னிட்டு அநேக ஆசிரியர்கள் மாணவருக்கு எவ்விதமான சிரமமும் கொடுக்காமல் விட்டுவிடுகிருர்கள். இது மாணவரின் குற்றமே தவிர ஆசிரியர்மார்களின் குறையல்ல.

ஆகவே மாணவர்களாகிய நாங்கள் "ஒழுக்கத்தைக் காப்பாற்றுவது எமக்கு விருப்பம் தரும்" என்பதை மனதில் நிறுத்தி அதன்படி ஒழுகி வாழ்க்கையில் உயர்வோமாக. எல்லோரும் முதற்பயிற்சியாகிய ஒழுக்கத்தில் தேறுவோம்.

"புதுமைக் கிறுக்கன்"
கொழும்பு.

## நமது தேசிய பாஷை

தேசியம் என்பது தேசத்தோடொப்பது என்பது பொருள். நம் இலங்கைத் தீவின் மத்திய பாகத்திலும், தென் பாகத்திலும் சிங்களவரும். வட பகுதி, கீழ் பகுதிகளில் தமிழர்களும் அதிகமாய் இருக்கிறார்கள் ஆதலால் நம் அன்னையாம் இலங்கையின் தேசிய பாஷை தமிழும் சிங்களமும் என்பது மிகையாகாது.

நம் அன்னையானவள் இதுவரை அந்நியரின் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்தாள். இன்று நம் தாய் பாஷைக்கு நாம் எல்லோரும் புத்துயிர் அளித்து நிலைபெறச் செய்தல்வேண்டும். ஆனல் நம் நாட்டில் தேசியம் என்ருல் என்ன என்பதை உணராத சிங்கள மக்கள் தங்கள் பாஷையையே தேசிய பாஷையாக்க எத்தனிக்கிருர்கள் எத்தனையோ மூடு மந்திர வித்தைகள் எல்லாம் நடத்திவருகிருர்கள் தமிழ்ப் பாஷையைக் கைவிடோம் என்று சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு இனிப்புக் காட்டுகிருர்கள்.

நம் பாரத நாட்டில் அவதரித்த பாரதி "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணும்" என்று கூறிய செஞ்சொல்லை செவியில் ஏற்றுங்கள். கண்களை விழியுங்கள் அப்பொழுது உங்கள் நிலையை உணர்வீர்கள். உங்கள் பாஷையை உணர்வீர்கள் கன்னித் தமிழ் இந்நாட்டில் களிப்புற, உங்கள் செந்தமிழ் இந்நாட்டில் செழிப்புற தமிழ்ப் பாஷை தேசியப் பாஷையாய் விளங்கச் செய்வதே ஒவ்வொரு தமிழனின் கடமை தமிழன் கடமை தவறவே மாட்டான் ஆதலால் தமிழர்களே இன்றே எழுங்கள் போர் தொடுங்கள். தமிழை நிலைநாட்டுங்கள் தமிழ்த் தாயை மதிப்புறச் செய்யுங்கள்.

ஆ. சபாரத்தினம்
தெல்லிப்பழை:

—

## பொன் மொழிகள்

● அறிஞனுக்கு அனைத்துலகும் தாய் நாடே சாந்தமான மனத்திற்கு எந்த இடமும் அரண்மனையே.

—கேடோ

● கடன்படும் செல்வர்களிலும், கடன்படா வறியவர்களே மிகுந்த சுகம் உடையவர்கள்.

—நாவலர்

பு. ...
மத்திய ...
மட்டக்களப்பு.

## ஸ்ரீ சுத்தானந்தபாரதியார்......

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்காங்கு வரவேற்பளிக்க உத்தேசித்துள்ளன என்றும் திரு அம்பிகைபாகன் மேலும் தெரிவிக்கிருர்

யாழ்ப்பாணம் வரவேற்புச் சபைக்கு டாக்டர் க குருசாமிதலைவராகவும் திருவாளர்கள் ச. அம்பிகைபாகனும் செ. விசாகப் பெருமாளும் இணைச் செயலாளர் பொருளாளர் ஆகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள்.

சுவாமிகளுக்கு யாழ்ப்பாணத்தில்வரவேற்பு அளிக்க விரும்பும் ஸ்தாபனங்கள், சுவாமிகளின் சுற்றுப் பிரயாணத் திட்டத்தின் விவரம் அறிய விரும்புவோர் "சுத்தானந்த பாரதியார் வரவேற்புச் சபைச் செயலாளர், வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பிலும் சுவாமிகளுக்கு ஒரு வரவேற்பு அளிக்க ஒரு சபை இயங்குவதாகத் தெரிகிறது ஆனல் அதைப்பற்றி நமக்கு கிடைத்திருக்கும் ஒரு கடிதம் உண்மையாயிருக்கும் பட்சத்தில் நாம் பெரிதும் மனவேதனை அடைய வேண்டியிருக்கிறது. அக்கடிதம் கூறுவதாவது:

"தமிழ் முனிவரான சுத்தானந்தருக்கு மட்டக்களப்பிலும் வரவேற்பளிக்க ஒரு சில பிரமுகர்கள் குசுகுசுக் கூட்டம் நடத்தித் திரிகின்றனர். சாதாரண மக்கள் பலருக்கு இந்த வரவேற்பு சபையில் கலந்துகொண்டு தொண்டு புரிய ஆர்வம் இருந்தும் அதற்கு இந்த தனிக்காட்டுப் பிரமுகர்கள் இடம் கொடுப்பதாயில்லை. பொதுமக்களை பொது விளம்பரம்மூலம் அழைத்து ஒரு வரவேற்புச் சபையை நியமிக்காமல் பண்டிதர்களும் பட்டதாரிகளும் மட்டும் குஞ்செவிக் கூட்டம் போட்டு குசுகுசுத்துத் திரிவது ஏனோ தெரியவில்லை. மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் சுத்தானந்தரைக் குடத்திலிட்டு மறைப்பதற்குத்தான் இவர்கள் செயல் பயன்படும்."

சுத்தானந்தரின் திருப் பெயரால் இலங்கை முழுவதிலும் முதன்முதலாக ஒரு கழகம் ஸ்தாபித்து தொண்டு புரிந்த நாடு மட்டக்களப்புத்தான் என்று அங்குள்ள இளைஞர்கள் பெருமிதத்தோடு சொல்ல முடியும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னல் முற்போக்குள்ள பல இளைஞர்கள் ஒன்று சேர்ந்து மட்டக்களப்பு சிவானந்த வாசிகசாலையில் சுத்தானந்தர் கழகம் என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார்கள் புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் அச் சங்கத்தின் தலைவராக விளங்கினர் சாது நடராஜமணி போன்றவர்கள் அதில சேர்ந்து சுவாமி சுத்தானந்தரின் இலட்சியங்களுக்கிணங்க சமயப் பணியும் தமிழ்ப் பணியும் ஆற்றினர். மண்டூர், சற்ருண்டி, அமிர்தகழிபோன்ற க்ஷேத்திரங்களில் உற்சவகாலங்களில் சமயப் பிரசங்கங்கள் நிகழ்த்தினர். பெரியார்களை அழைத்து தமிழ் வளர்த்தனர். கடந்த ஆண்டில்கூட சுத்தானந்தர் பெயரால் கழகம் மட்டக்களப்பில் பொதுக் கூட்டங்கள் நடத்தியதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று.

இப்படி சுத்தானந்தரையும் அவர் இலட்சியங்களையும் ஆதர்ஸமாகக்கொண்ட இளைஞர்கள் நூற்றுக்கணக்கானோர் இன்றும் அங்கு இருந்துவரும்போது அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடாமல் ஒருசிலர் சகலவற்றையும் தாங்களே செய்து முடிக்கவேண்டும் என்ற குறுகிய மனப்பான்மையோடு நடந்துகொண்டால் அது கண்டிக்கப்படவேண்டியதே

சுத்தானந்தருக்கு வரவேற்பு அளிக்கும் விஷயத்தில் மட்டக்களப்பு நகரசபை எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருக்கிறது என்ற விவரம் தெரியவில்லை. கொழும்பு மாநகர சபையை யாழ்ப்பாணம் மாநகர சபையும் திரிகோணமலை நகரசபையை மட்டக்களப்பு நகர சபையும் பின்பற்ற வேண்டும்.

### அக்கரைப்பற்றில்

அக்கரைப்பற்றில்சுவாமிகளுக்கு ஒரு வரவேற்பு அளிக்க அங்குள்ள ராமகிருஷ்ண சங்க பாடசாலை ஆசிரியர்கள் பெரிதும் உழைத்து வருவதாகத் தெரிகிறது தலைமை ஆசிரியர் திரு க நடராஜன் சுவாமிகளின் விஜயத்தையொட்டி ஒரு சிறு ஞாபகார்த்தமலர் வெளியிடமுயற்சிகளெடுத்து வருகிறார்.

### பொது

சுவாமிகள் கதிர்காமம், திருக்கோணேச்சரம் திருக்கேதீச்சரம் நயினை தீவு, செல்லச் சந்நிதி நல்லூர், கீரிமலை, சிவனொளிபாதம் முதலிய இடங்களையும் தரிசிப்பார்கள் என்று தெரிகிறது.

—சுத்தானந்த
சரணானந்தன்

## விசாரணை........

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

என்று கேட்டார். இப்பிரசுரத்தை வினியோகம்செய்வதில் மற்றொரு மந்திரியும் சம்பந்தப்பட்டிருந்தார் என்ற வதந்தி அடிபடுகிறதாக ஒரு புதிய குண்டைத் தூக்கிப் போட்டார் திரு கெனமன்.

"இந்த தஸ்தாவேஜில் கண்ட விஷயங்கள் அனைத்தும் உண்மையானவை என்று சபை கருதலாமா?" என்று ஒரு குறுக்குக் கேள்வியைக் கேட்டு வைத்தார் திரு சுந்தரலிங்கம்

இப்பிரசுரத்தைத் தான் எழுதவில்லையென்று சேர் ஜோன் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் ஒரு திடீர் அறிக்கை விடுத்தார். இதன்மூலம்தான் அதை எழுதினதாகப் பொதுமக்கள் சந்தேகிக்கிறார்களென்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார்.

இம்மாதிரி கலகங்களைத் தூண்டிவிட்டு, நெருக்கடியைச் சிருஷ்டிக்கும் தஸ்தாவேஜுகள் பல பல்வேறு ரூபங்களில் கிளப்புவதற்கு பிரதமரின் மறுப்பு ஆக்கமளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் சுதந்திரத்தைப் பறித்த புத்தகத் தெரிவு சபை

## உடனடியாக ரத்துசெய்யப்பட வேண்டும்

(சோ. கு. சும்பிப்பிள்ளை)

இன்று இலங்கை வாழ் மக்களின் முன் அரிசி-சீனி எனப் பல பிரச்னைகள் எழுந்துள்ளன. இவைகளோடு புத்தகப் பிரச்னையையும்சேர்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வந்துள்ளது

புத்தகங்களைத் தெரிந்து பாடசாலைகளில் நியமிப்பதற்காக ஒரு சபை கடந்த காலங்களில் வேலை செய்து வந்தது பலருக்கும் நினைவிருக்கலாம். இச்சபை மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது மக்கள் கிளர்ச்சியின் பலனாக தேசாதிபதி காலஞ் சென்ற மேல் சபைத் தலைவர் மேசர். விஜயக்கோன் அவர்களின் தலைமையில் ஒரு சபையை நிறுவினார். இச்சபைமக்கள் அபிப்பிராயத்தைத் திரடடித் தேசாதிபதியிடம் ஒப்படைத்தது. இதன் பலனாக புத்தக நியமன சபை உடனடியாக நீக்கப்பட்டது.

திரு. எச். டபிள்யு ஹவுஸ் அவர்கள் வித்தியாதிபதியாக வந்தபின்பு புததகநியமன சபை வேறு ரூபத்தில் கிளம்பியது. சுய பாஷைகளில் உயர் தரக் கல்வி கற்பிப்பதற்குப் போதிய புத்தகங்கள் இல்லை. இக்குறையை நீக்கவே புத்தக நியம-பிரசுர சபை ஏற்படுவதாக வித்தியாதிபதி அவர்கள் கூறினார்கள். இதன் தலைவர் வித்தியாதிபதி. புத்தகம் எழுதியவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் புத்தகங்களை மேற்படி சபைக்கு அனுப்பும்படி அறிவித்தல் பிறந்தது. புததகம அனுப்பும் போது அதை மதிப்பிடும் கூலியாக 10 ரூபாவும் அனுப்ப வேண்டும.

சுய பாஷைகட்கான புத்தகங்களை வெளியிடும்-தெரிவு செய்யும் சபைக்கு அதன் வாடையே இல்லாத ஆங்கிலேயன் அதிகாரி இந்த அதிகாரிக்குச் சுயபாஷையின் தாரதம்மியத்தை உணர முடியுமா? அடுதத தாகப் புத்தகமதிப்பிறகு 10 ரூபா கூலி சுதந்திர நாட்டிலே எழுதப்படும் புத்தகங்கட்கு அரசாங்கமலலவா பணம் கொடுககவேண்டும்? அர்த்தமற்றுக கோடிக் கணக்காகச் செலவு செய்யும் நமது அரசாங்கம் ஒரு புத்தகத்தை மதிப்பிட 10 ரூபாகூலிவாங்குவது வேடிக்கையாக இல்லையா?

புத்தக நியமன-பிரசுர சபையின் தான் தோன்றித்தனம் இம்மட்டா? புத்தகங்களைப் பிரசுரிக்க ஏற்படுத்தப்பட்ட சபை, புத்தகங்களைக் கட்டுப்படுத்துவதில் முனைந்துள்ளது. தனது நோக்கத்தை ஏன் இச்சபை மறந்து செயலாற்றுகிறது? புத்தகம் தெரிவது மாத்திரம் ஆசிரியருக்கு இருந்த ஒரே ஒரு சுதந்திரம். இச்சுதந்திரம்கூட இன்று பறிக்கப்பட்டு விட்டதே இதைக் குறித்து எத்தனை ஆசிரிய சங்கங்கள் பேசின; இல்லை எத்தனை ஆசிரியர்கள் பேசினார்கள். கைகட்டி, வாய் புதைத்து பெளனியாக வாழ்வதின் மர்மம் என்ன?

மேற்படி சபை இன்னும் இன்ன புத்தகங்கள் தான் தகுதியானவைஎனப் பொது மக்களுக்கு அறிவிக்கவில்லை. ஆனால், புத்தக வியாபாரிகள் மட்டும் இதை அறிந்து விட்டார்கள். அறிந்தவர்கள் சும்மா இருக்கவில்லை. சபை தங்கள் புத்தகங்களை அனுமதித்து விட்டதாக வெற்றி முரசு கொட்டுகின்றனர். இவர்களின் வெற்றி முரசுக்குக் காரனம் கைக்கூலியா? புத்தக விஷயம் தானே என்று வாளா இருக்கக் கூடாது புத்தகம் எங்கள் எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் கருவ. புத்தகப் பிரச்னை ஆசிரியர்களினதோ-பிள்ளைகளினதோ-புத்தக வியாபாரிகளினதோ பிரச்னையல்ல இதுமக்கள் பிரச்னை மக்கள் ஒன்று கூடி இந்த அட்டூழியத்தை அடக்க வேண்டும். ஊர் ஊராகக் கூட்டம் வைத்துக் காரணத்தை விளக்கி மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டவேண்டும். இதற்காகச் சிங்களமக்கள் பெருங் கிளர்ச்சி செய்கின்றனர். தமிழ் மக்கள் மட்டும் தூங்குவது ஏனோ?

---

### பரத்வாஜமகரிஷி கண்டுபிடித்த ஆகாய விமானம்

#### பழஞ்சுவடிகள் கூறும் விவரம்

பழங்காலத்தில் பரத்வாஜ மகரிஷி எழுதியிருந்த "விமான சாஸ்திரம்" பற்றிய தஸ்தாவேஜு ஒன்றை சமீபத்தில் மைசூரிலுள்ள சர்வதேச சமஸ்கிருத ஆராய்ச்சிக் கழக டைரெக்டர் கண்டுபிடித்துள்ளார். மேற்படி தஸ்தாவேஜு தேவநாகரி லிபியில் எழுதப்பட்டுள்ளது.

"சுந்தரம்" "சகுண" 'ருக்கா' ஆகிய 3 வகை விமானங்களின் அமைப்பு பற்றிய விளக்கப் படங்களும் கிடைத்துள்ளன.

மேற்படி தஸ்தாவேஜுவில் 500 சூத்திரங்கள் கொண்ட 8 அததியாயங்கள் உள்ளன. பல்வேறு வகை விமானங்களைத் தயாரிப்பதற்கான முறையும் மேற்படி விமான "சாஸ்திரத்"தில் எடுத்துரைக்கப்பட்டது.

உடைக்க முடியாத, தீப்பிடிக்காத விமானங்களை எப்படித் தயாரிப்பது என்பது பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் 31 பாகங்கள் அடங்கிபிருப்பதாக மேற்படி விமான சாஸ்திரம் கூறுகிறது

செயற்கை வைரங்கள், பல்வேறு வகை யந்திரங்கள் முதலியவைகளைத் தயாரிக்கும் விதம் பற்றியும் அதில் கூறப்பட்டுள்ளது

செயற்கை முறையில் மழை பெய்விக்கும் முறை பற்றியும் பரத்வாஜ மகரிஷி எழுதியிருக்கிறார்

---

### மண்ணில் முளைத்த மனிதக் கை!

#### ஹைதராபாத்தில் அதிசயம்

—சிக்கந்திராபாத்

குரயால்குடா என்ற இடத்தில் மண்ணிலிருந்து ஒரு மனிதக கை முளைத்திருப்பதாக ஸ்தல பத்திரிகைகளில் செய்தி வெளியாகி இருக்கிறது. இந்த அதிசயததைப் பார்க்க ஏராளமான ஜனங்கள் செல்கிறார்களாம்

ஒரு தாயை மகனே கொன்ற கொடிய பாவத்தை இந்தக் கை குறிப்பிடுவதாக ஸ்தல மக்கள் நம்புகின்றனர். இவ்விதம் பூமியில் கை முளைப்பது சுற்றுப்புறத்தில் வாழும் மககளுக்கு கேடு காலத்தைக் குறிக்கிறதாம்.

ஹைதராபாத் ராஜயத்தில் நால்கொண்டா ஜில்லாவில் ஹைதர் நகர் தாலுகாவில் இககிராமம இருக்கிறது.

---

# வேஷதாரி வேலாயுதம்

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

சென்று கைகால் முகம் கழுவிக்கொண்டு வழக்கமாகக் காப்பி சாப்பிடும் நேரத்துக்கு ஹோட்டலை நோக்கிப் புறப்படத் தயாரானான் திடீரென்று ஒரு ஜீப் மோட்டார் வந்து அவன் வாசலில் நின்றது. அதிலிருந்து சில போலீஸ்காரரும், ஒரு இன்ஸ்பெக்டரும் இறங்கி இவனை நோக்கி நடந்தார்கள். இவன் அண்டையில் போனதும் இன்ஸ்பெக்டர் "நீங்கள் தானே சமூக முன்னேற்றத் தொண்டர் வேலாயுதம்?" என்று கேட்டுக்கொண்டே ஓர் பத்திரத்தை அவன் கையில் கொடுத்தார். அதை அவன் படித்தானென்றாலும் அது என்ன என்று புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையில் அப்போது அவனிருக்கவில்லை. 'இது என்ன சார்?' என்று ஒரு மாதிரி தன்னைச் சமாளித்துக்கொண்டு பயந்த குரலில்கேட்டான். அதற்கு "நீங்கள் அனேகமான கள்ளக் கூப்பன்கள் வைத்துக் கொண்டு கூட்டுறவுக்கடைகளிலுள்ள அரிசிகளையெல்லாம் எடுத்து கள்ளமார்க்கட்டில் அதிக விலைக்கு மூடைகணக்காக விற்கிறீர்களென்று எங்களுக்குத் தகவல் கிடைததின்பேரில் உங்கள் வீட்டைச் சோதனைபோட வந்திருக்கிறோம்; இது உத்தரவுப் பத்திரம்" என்று இன்ஸ்பெக்டர் கூறியதைக்கேட்டதும் வேலாயுதத்தின் இருதயமே நின்று விடும்போலிருந்தது. இன்ஸ்பெக்டர் அறைத் திறப்புக்களையெல்லாம் இவனிடம் வாங்கி ஒவ்வொரு அறையாகத் திறந்து பார்த்துக் கொண்டு வந்தார். கடைசியில் பெரிய பூட்டுப் போட்டிருந்த அறைக்கதவைத் திறந்ததும், வேலாயும் ஓட முயற்சித்தான்; ஆனால் பக்கத்தில் நின்ற போலீஸ்காரன் பிடித்துக் கொண்டான். திறந்த அவ்வறைக்குள் நிரம்ப ஏராளமான அரிசி மூடைகள் அடுக்கப்பட்டிருந்தன. எல்லா மூடைகளையும் கணக்கெடுப்பதற்காகப் புரட்டிக் கொண்டிருக்கும் போது அங்கோர் மூடை அங்கிருந்த மூடைகளுக்கு வித்தியாசம் சிறியதாகத் தென்பட்டதும் அதைப் போலீசார் பிரித்துப் பார்த்தார்கள். அதற்குள் பெண்ணின் பிரேதமொன்று மார்பில் கத்திக் காயத்தோடும், அவ்விரத்தக் கறையோடும் பாயால் சுற்றிக கட்டப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே போலீசார் வேலாயுதத்தின் கைகளில் விலங்கைமாட்டிவிட்டு அரிசி மூடைகளை ஓர் வாடகை லொறியிலும்; பிரேத மூடையையும் வேலாயுததையும் தங்கள் ஜீப் மோட்டாரிலும் ஏற்றிக் கொண்டு போலீஸ்டேசனுக்கு விரைந்தார்கள்.

* * *

அடுத்த நாள் போலீஸ் கோர்ட்டில் வேலாயுதத்தை எதிரியாக நிறுத்தி ஆரம்பித்த இந்த வழக்கு சுமார் ஆறுமாத காலமாக நடந்து இறுதியாகச் சுப்ரீம் கோர்டடில்வேலாயுதத்துக்குத் தூக்குத் தண்டனையோடு முடிந்தது.

அடுத்த நாள் "விற்பன்னர் வேலாயுதம்' என்று புகழ்ந்தெழுதிய தினசரிகளெல்லாம் 'வேஷதாரி வேலாயுதம்" "வேஷதாரி வேலாயுதம்' என்ற கொட்டை எழுத்துக்களாலான தலையங்கங்களே சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சூரியனைப்போன்று கண்ணை உறுத்திக் கொண்டு மிளிர்ந்தன.

(யாவும் கற்பனையே)

---

சகலவிதமான

**இன்ஷூரன்ஸ்**

சேவைகள்

முக்கிய பிரதேசங்களிலெல்லாம் கிளைகளையும், ஏஜன்ஸிகளையும் கொண்டு சென்ட்ரல் யூனியன் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட் அனைவருக்கும் எல்லாவிதமான தேவைகளுக்கும் இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு அளிக்கிறது.

யாழ்ப்பாணம், வவுனியா, தெல்லிப்பழை, புத்தளம், அனுராதபுரம், திரிகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, ஹட்டன், மாத்தளை, பேராதனை, நாவலப்பிட்டி, மாவனல்லை, காலி, ஹக்மன, நீர்கொழும்பு, பலாங்கொடை ஆகிய இடங்களிலிருக்கும் எங்கள் காரியாலயங்களில் கலந்து ஆலோசியுங்கள்.

**ஆயுள் நெருப்பு-கப்பல்**

விபத்துக்களுக்கும் வேறு அடக்கமான தேட் பார்ட்டி பாலிஸிகளுக்கும், எல்லாவிதமான மோட்டார் வாகனங்களுக்கும் போனஸ் லாபம் முதலியவற்றுடன் சலுகைகள் செய்யப்படும்.

தலைமை ஆபீஸ்:

Central Union Insurance Co., Ltd,
30, UPPER CHATHAM STREET,
COLOMBO.

---

# பண்டிதமணிக்கு பொற்கிழிப் பரிசில்

22-9-52-ம் திகதி யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் பண்டிதமணி நவநீத கிருஷ்ணபாரதியாருக்குஒரு பொற்கிழிப் பரிசில் வழங்கப்பட்டது

கூட்டத்திற்கு மந்திரி திரு நடேசன் தலைமை வகித்தார். கலாநிதி டாக்டர் கணபதிப்பிள்ளை முதலியார் சின்னத்தம்பி வித்துவான் வேந்தனார் முதலியோர் பாரதியாரின் வித்வத்தன்மையை விளக்கிப் பேசி அவரை வாழ்த்தினார்கள். பாராட்டுப் பாக்களும் பாடப்பட்டன.

'பொற்கிழி'யில் பண்டிதமணிக்குக் கொடுத்த காணிக்கை ரூ. 4800-ந் தானும். இதைக் கேட்டு தமிழபிமானிகள் தலைகுனியத்தான் செய்வார்கள். அக்கூட்டததில் பிரசன்னமாயிருந்த பெரிய பெரிய பணக்காரர்கள் என்ன செய்தார்களோ? 'பொற்கிழிப் பரிசில்' என்று பிரமாதப்படுத்தியதும் காணிக்கை பதினாயிரக்கணக்கிலிருக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் கடைசியில் ஏமாந்துபோனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறது! எதிர்பாருங்கள்!!

சினிமாஸ் லிமிட்டெட்டார் வெள்ளித் திரைகளில்
வெளியிடவிருக்கும் உன்னத தமிழ்ச் சித்திரம்

குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் ஹாஸ்யக் களஞ்சியம்

பல்லாயிரக் கணக்கான ரஸிகர்கள் ஆவலுடன்
எதிர்பார்த்த பாங்கான திரைப்படம்

பிரம்ச்சாரிகளுக்கு ஓர் அனுபவம் - குடும்பஸ்தர்களுக்கு
ஓர் மகிழ்ச்சி விருந்து!

# கல்யாணம் பண்ணிப்பார்

## கிங்ஸ்லி திரையில்

தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணி சனி ஞாயிறு 2-30, 6 மணி 9-30 மணி ஞாயிறு காலை 10 மணி விசேஷகாட்சிக்

★ உஜ்ஜனி!......... அது ஓர் சாம்ராஜ்யம் ஆள்பவன் வீரசேன மன்னவன் கொடுங்கோலை செங்கோலாகக் கொண்டவன். இந்நாட்டிலே நடக்கும் நிழ்ச்சிகள் அனந்தம்.

★ பெற்றதாயும் பிறந்த நற்புதல்வனும் பரஸ்பரம்கொள்ளும் பந்தபாசம். அதுமட்டுமா? காளைபருவமும் கன்னிப் பருவமும் கலந்து மகிழும் கவின் மிகு காட்சிகள்

★ சூழ்ச்சி, சுயநலம், வஞ்சகம், போட்டி, பொறாமை, சபதம், நட்பு முதலிய பல்வேறு சக்திகள் அங்கு வேலைசெய்கின்றன. அந்த உஜ்ஜயின் மகுடத்தின் ரசமான

கதைதான்

# "தர்மதேவதா"



லிங்கமூர்த்தி, முக்கமலா, சாந்தகுமாரி, லலிதா முதலியோர் திறம்பட நடித்தது.

| காமினி | மைலன் | வெம்பிளி | வெல்லிங்டன் |
|---|---|---|---|
| (கொழும்பு) | (கொழும்பு) | (கண்டி) | (யாழ்ப்பாணம்) |
| ஷியாமா, உல்ஹாஸ், ஷீலா நடிக்கும் பத்னம் ஹிந்திப் படம் | லலிதா, பத்மினி, குமாரி கமலா நடிக்கும் திகம்பர சாமியார் | ராமராவ், மாலதி நடிக்கும் "பாதாள பைரவி" | ராமராவ் - மாலதி நடிக்கும் பாதாள பைரவி. |


இப்பத்திரிகை கொழும்பு, தட்டாதெரு, 196ம் இலக்க இலத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டட் ஸ்தாபனத்தார் சார்பில் 194 ஏ, தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1952 ஒக்டோபர் 5ந் தேதிபிரசுரம் செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org